



dinakani2023@gmail.com

RNI-TNTAM/2023/88253

# நமது தினகனி

NAMADHU DHINA KANI


www.dhinakani.com

காலை நாளிதழ்






| Vol: 02 | Issue: 291 | 4 Pages | 18.5.2025 | Sunday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 02 | இதழ்: 291 | 4 பக்கங்கள் | 18.5.2025 | ஞாயிற்றுக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |

**உள்ளத்தாற் பொய்யா தொழுகின் உலகத்தார்**
**உள்ளத்து ளெல்லாம் உளன்**

**விளக்கம்:**
ஒருவன் தன் உள்ளம் அறியப் பொய் இல்லாமல் நடப்பானானால் அத்தகையவன் உலகத்தாரின் உள்ளங்களில் எல்லாம் இருப்பவனாவான்.

## அமெரிக்க பொருட்களுக்கு முழுமையான வரிவிலக்கு அளிக்க இந்தியா தயார்: டிரம்ப்



வாஷிங்டன், மே.18

அமெரிக்க ஜனாதிபதியாக டிரம்ப் ஜனவரி மாதம் பொறுப்பேற்றார். அதில் இருந்து பல்வேறு அதிரடி நடவடிக்கைகளைடிரம்ப்மேற்கொண்டு வருகிறார். அதன்படி, அமெரிக்க பொருட்கள் மீது அதிக வரி விதிக்கும் நாடுகள் மீது டிரம்ப் சரமாரியாக வரி விதித்தார். அதன்படி, அமெரிக்காவில் இறக்குமதி செய்யப்படும் இந்திய பொருட்கள் மீது 27 சதவீத வரி விதிக்கப்பட்டது. அதேவேளை, இந்த கூடுதல் வரி விதிப்பு ஜூலை 9ம் தேதிவரை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. இந்த கால இடைவேளியில் வரி விதிப்பு தொடர்பாகவும், வர்த்தக ஒப்பந்தம் தொடர்பாகவும் இறுதி முடிவு எடுக்க ஜூலை 9 வரை அவகாசம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதையடுத்து, இந்திய வர்த்தக மந்திரி பியூஷ் கோயல் அமெரிக்காவுக்கு சென்றுள்ளார். அவர் அந்நாட்டு வர்த்தக மந்திரியுடன் பேச்சுவார்த்தை நடத்த உள்ளார்.

இந்நிலையில், அமெரிக்க செய்தி நிறுவத்திற்கு டொனால்டு டிரம்ப் நேற்று பேட்டியளித்தார். அப்போது, அமெரிக்க பொருட்களுக்கு முழுமையான வரிவிலக்கு அளிக்க இந்தியா தயாராக இருப்பதாக அவர் கூறினார். இது தொடர்பாக அவர் கூறியதாவது, உலகிலேயே மிகவும் அதிக வரி விதிக்கும் நாடாக இந்தியா உள்ளது. இத்தகைய சூழ்நிலையில் இந்தியாவுடன் வர்த்தகம் செய்வது இயலாத ஒன்று. அமெரிக்காவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் அனைத்து பொருட்களுக்கும் முழுமையாக வரிவிலக்கு அளிக்க இந்தியா தயாராக இருந்தது. இந்தியாவுடன் வர்த்தக ஒப்பந்தம் விரைவில் மேற்கொள்ளப்படும். அதில், எனக்கு எந்த அவசரமும் இல்லை. அனைவரும் அமெரிக்காவுடன் ஒப்பந்தம் செய்துகொள்ள விரும்புகின்றனர்' என்றார்.

அதேவேளை, எந்தஒரு வர்த்தக ஒப்பந்தமும் இருநாட்டிற்கும் நன்மையை அளிக்கும் வகையி இருக்கவேண்டும் என்று இந்திய வெளியுறவுத்துறை மந்திரி ஜெய்சங்கர் கூறியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஏமன் துறைமுகங்கள் மீது இஸ்ரேல் தாக்குதல்



சனா, மே.18

இஸ்ரேல் , ஹமாஸ் இடையேயான போர் ஓராண்டுக்குமேல் நடைபெற்று வருகிறது. இந்த போரில் 53 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். இதனிடையே, இஸ்ரேல், ஹமாஸ் இடையேயான போரில் ஹமாஸ் ஆயுதக்குழுவினருக்கு ஏமனில் செயல்பட்டு வரும் ஹவுதி கிளர்ச்சியாளர் ஆதரவு அளித்து வருகின்றனர்.

ஹமாசுக்கு ஆதரவு அளிக்கும் வகையிலும், இஸ்ரேலுக்கு எதிரான நடவடிக்கை என்ற பெயரில் அரபிக்கடல், செங்கடலில் செல்லும் சரக்கு கப்பல்களை குறிவைத்து ஹவுதி கிளர்ச்சியாளர்கள் தாக்குதல் நடத்தி வருகின்றனர். மேலும், இஸ்ரேல் மீதும் அவ்வப்போது ஏவுகணை, டிரோன் தாக்குதல் நடத்தி வருகின்றனர். இந்த தாக்குதலுக்கு இஸ்ரேலும் பதிலடி கொடுத்து வருகிறது.

அந்த வகையில், கடந்த வாரம் இஸ்ரேலை குறிவைத்து ஹவுதி கிளர்ச்சியாளர்கள் ஏவுகணை தாக்குதல் நடத்தினர். அந்த தாக்குதலுக்கு பதிலடியாக இன்று ஏமனில் ஹவுதி கிளர்ச்சியாளர்கள் கட்டுப்பாட்டில் உள்ள 2 துறைமுகங்கள் மீது இஸ்ரேல் வான்வழி தாக்குதல் நடத்தியுள்ளது. ஏமனின் ஹுடைடா மற்றும் அஸ் சலிப் நகரங்களில் உள்ள துறைமுகங்கள் மீது இஸ்ரேல் விமானப்படை குண்டு மழை பொழிந்துள்ளது. இந்த தாக்குதலில் ஏற்பட்ட உயிரிழப்பு, பாதிப்பு தொடர்பான விவரம் இதுவரை வெளியாகவில்லை.

## இந்தியாவுடன் பேச்சுவார்த்தை நடத்த பாகிஸ்தான் மந்திரி விருப்பம்



இஸ்லாமாபாத், மே.18

காஷ்மீரின் பஹல்காமில் கடந்த மாதம் 22ந் தேதி பயங்கரவாதிகள் நடத்திய கொடூர தாக்குதலில் சுற்றுலா பயணிகள் உள்பட 26 பேர் கொல்லப்பட்டனர். பாகிஸ்தானை சேர்ந்த மிக முக்கிய பயங்கரவாத அமைப்பான லஷ்கர்இ தொய்பாவின் கிளை அமைப்பு ஒன்று இதற்கு பொறுப்பேற்றது.

பஹல்காம் பயங்கரவாத தாக்குதலை தொடர்ந்து இந்தியாபாகிஸ்தான் இடையே கடந்த 7ந் தேதி ஆபரேஷன் சிந்தூர் என்ற பெயரில் ராணுவ தாக்குதல் தொடங்கியது. இந்திய படைகள் பாகிஸ்தானின் பயங்கரவாத தளங்களை குறிவைத்து தாக்கின. பயங்கரவாதிகள் பலர் கொல்லப்பட்டனர். பதிலுக்கு பாகிஸ்தானும் டிரோன்கள் மூலம் தாக்குதல் நடத்தியது. அவற்றை இந்திய ராணுவத்தினர் வழியிலேயே முறியடித்தனர்.

இதனைத்தொடர்ந்து, இந்தியாபாகிஸ்தான்இடையே 4 நாட்களாக சண்டை நடந்தது. கடந்த 10ந் தேதி சண்டை நிறுத்தம் ஏற்பட்டது. இனிமேல் பாகிஸ்தானுடன் பேச்சுவார்த்தை நடத்துவதாக இருந்தால், பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் இருந்து பாகிஸ்தான் வெளியேறுவதை பற்றி மட்டுமே நடத்தப்படும் என்று இந்தியா கூறி வருகிறது.

இந்நிலையில், இந்தியாவுடன் கூட்டு பேச்சுவார்த்தை நடத்த பாகிஸ்தான் விருப்பம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக அந்நாட்டு வெளியுறவுத்துறை மந்திரி இஷாக் தர், பாகிஸ்தான் செனட் சபையில் பேசுகையில், "இந்தியாபாகிஸ்தான் ராணுவ தலைமை இயக்குனர்கள் பேச்சுவார்த்தை, மே 18ந் தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. 18ந் தேதிவரை சண்டை நிறுத்தம் நீட்டிக்கப்பட்டுள்ளது. ஆனால், இரு நாடுகளுக்கிடையிலான பிரச்சினைகளுக்கு தீர்வு காண அரசியல் பேச்சுவார்த்தை நடத்தப்பட வேண்டும். சர்ச்சைக்குரிய பிரச்சினைகளுக்கு தீர்வு காண இந்தியாவுடன் கூட்டு பேச்சுவார்த்தை நடத்துவோம் என்று உலகத்துக்கு சொல்லி இருக்கிறோம். சிந்துநதி ஒப்பந்தத்தை சட்டவிரோதமாக நிறுத்தி வைப்பதன் மூலம், பாகிஸ்தானுக்கு தண்ணீர் வருவதை நிறுத்துவது போராக கருதப்படும்" என்று அவர் பேசினார்.

இந்தியாபாகிஸ்தான் இடையே கடைசியாக கடந்த 2003ம் ஆண்டு கூட்டு பேச்சுவார்த்தை தொடங்கப்பட்டது. அனைத்து சர்ச்சைக்குரிய பிரச்சினைகளையும் பேச திட்டமிடப்பட்டு இருந்தது. ஆனால், 2008ம் ஆண்டு நடந்த மும்பை தாக்குதலுக்கு பிறகு பேச்சுவார்த்தை முறிந்தது.

# கிணற்றுக்குள் ஆம்னி வேன் கவிழ்ந்து 5 பேர் பலி


# தலா ரூ.3 லட்சம் நிதியுதவி; மு.க.ஸ்டாலின் அறிவிப்பு

சென்னை, மே.18

தூத்துக்குடி மாவட்டம் சாத்தான்குளம் அருகே கிணற்றுக்குள் கார் பாய்ந்து விபத்துக்குள்ளானதில் ஒன்றரை வயது குழந்தை உட்பட 5 பேர் தண்ணீரில் மூழ்கி பரிதாபமாக உயிரிழந்தனர். வாகனத்தில் மொத்தம் இருந்த 8 பேரில் 3 பேர் உயிருடன் மீட்கப்பட்டனர். 4 மணி நேர மீட்புப் பணிக்குப் பின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில், கிணற்றுக்குள் ஆம்னி வேன் கவிழ்ந்து 5 பேர் உயிரிழந்த நிலையில் அவர்களின் குடும்பத்தினருக்கு முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் இரங்கல் தெரிவித்துள்ளார். இதுகுறித்து தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டிருப்பதாவது:





தூத்துக்குடி மாவட்டம், சாத்தான்குளம்வட்டம்,மீரான்குளம்2கிராமத்தில் இன்று மாலை கோயம்புத்தூரிலிருந்து திருச்செந்தூர் வட்டம், வெள்ளாளன் விளை, மீரான்குளம் சிந்தாமணி சாலையில் 8 நபர்களுடன் சென்றுகொண்டிருந்த கார் ஒன்று நிலை தடுமாறி சாலையின் அருகில் இருந்த கிணற்றில் எதிர்பாராதவிதமாக விழுந்து விபத்துக்குள்ளானது.

இதில் ரவி கோயில் பிச்சை (வயது 60), ஹெச்சியா கிருபாகரன் (வயது 49) க/பெ.ரவி கோயில் பிச்சை, மோசஸ் (வயது 50) த/பெ. தேவதாஸ், வசந்தா (வயது 49) க/பெ.மோசஸ் மற்றும் குழந்தை ஸ்டாலின் (1½ வயது) த/பெ.கெர்சோம் ஆகிய 5 நபர்கள் தண்ணீரில் மூழ்கி உயிரிழந்தனர் என்ற துயரகரமான செய்தியைக் கேட்டு மிகுந்த அதிர்ச்சியும் வேதனையும் அடைந்தேன்.

மேலும், இச்சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கும், அவர்களது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக்கொள்வதோடு, உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா 3 லட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## திருப்பூர் மாநகராட்சி தண்ணீர் தொட்டியில் ஏறி மது அருந்திய 2 பேரை போலீஸார் கைது

தண்ணீர்தொட்டியில் மனிதக்கழிவு கலந்ததாக பொதுமக்கள் எழுப்பிய புகாரை தொடர்ந்து, திருப்பூர் வடக்கு தொகுதி எம்எல்ஏ மற்றும் மண்டல தலைவர் ஆகியோர் தண்ணீர் தொட்டியை ஆய்வு செய்தனர்.

திருப்பூர் மாநகராட்சி 6வது வார்டு கவுண்டன்நாயக்கன்பாளையம் பகுதியில் மாநகராட்சி சார்பில் குடிநீர் அபிவிருத்தி திட்டத்தில் 17 லட்சத்து 50 ஆயிரம் லிட்டர் கொள்ளளவு கொண்ட 30 அடி உயர குடிநீர் தொட்டி கட்டப்பட்டு, கடந்த சில ஆண்டுகளாக பயன்பாட்டில் இருந்து வருகிறது. நேற்று மாலை தண்ணீர் தொட்டி மீது அமர்ந்திருந்த இரு மர்ம நபர்களை பொதுமக்கள் பிடித்து, போலீஸாரிடம் ஒப்படைத்தனர்.

அந்த நபர்கள், தண்ணீர் தொட்டியில் மனிதக் கழிவு கலந்ததாக அப்பகுதியினர் புகார் தெரிவித்தனர். தொடர்ந்து போலீஸார் மற்றும் மாநகராட்சி அதிகாரிகள் ஆய்வு செய்தனர். அப்போது திருப்பூர் வடக்கு தொகுதி எம்.எல்.ஏ., கே.என்.விஜயகுமார் அதிகாரிகளிடம் விசாரித்தார். 2ம் மண்டலத் தலைவர் கோவிந்தராஜ், தண்ணீர் தொட்டியை பார்த்துவிட்டு அங்கு மனிதக் கழிவு கலந்ததற்கான முகாந்திரம் எதுவும் இல்லையென தெரிவித்தார்.





குடிநீர் தொட்டி பகுதியை ஆய்வு செய்துவிட்டு, தொட்டியில் இருந்த தண்ணீரை மண்டலத் தலைவர் கோவிந்தராஜ், பொதுமக்கள் முன்னிலையில் குடித்து காண்பித்தார். பொதுமக்கள் தொடர்ந்து ஏற்க மறுக்கவே, பொதுமக்களின் கோரிக்கையை ஏற்று மாநகராட்சி ஊழியர்கள்தண்ணீர் தொட்டியை முழுமையாக சுத்தம் செய்தனர். இது தொடர்பாக வடக்கு போலீஸார் வழக்கு பதிந்தனர் இது தொடர்பாக போலீஸார் கூறும்போது, 'திருப்பூர் நெருப்பெரிச்சலை சேர்ந்த நிஷாந்த் (19) மற்றும் திருமுருகன்பூண்டியை சேர்ந்த சஞ்சய் (22) இருவரும் நண்பர்கள். திருப்பூர் பனியன் நிறுவனத்தில் வேலை பார்த்து வந்த நிலையில் நேற்று தண்ணீர் தொட்டி மேல் அமர்ந்து மது அருந்தி உள்ளனர்.

இதற்கு அப்பகுதி பொதுமக்கள் எதிர்ப்பு தெரிவித்தனர். மேலும் மனிதக் கழிவு எதுவும் தண்ணீர் தொட்டியில் கலக்கவில்லை. இந்நிலையில், 30 அடி தண்ணீர் தொட்டியின் மீது அபாயகரமாக அமர்ந்து மது அருந்திய நிலையில், இருவர்மீது வழக்கு பதிந்து கைது செய்யப்பட்டுள்ளனர்' என்றனர்



## தூத்துக்குடி மாவட்டம்சாத்தான்குளம் அருகே சோகம்: குழந்தை உட்பட 5 பேர் பலி

சாத்தான்குளம் அருகே 50 அடி ஆழ கிணற்றுக்குள் ஆம்னி வேன்பாய்ந்து விபத்துக்குள்ளானதில்ஒன்றரைவயதுகுழந்தை, 2 பெண்கள் உட்பட 5 பேர் பரிதாபமாக பலியாகினர்.

தூத்துக்குடி மாவட்டம், சாத்தான்குளம் அருகே உள்ள வெள்ளாளன்விளை ஆலயத்தில் பிரதிஷ்டை விழா நடைபெற்று வருகிறது.

இதில் கலந்து கொள்வதற்காக, கோயம்புத்தூர்மாவட்டம்துடியலூரில் இருந்து ஒரு குடும்பத்தைச் சேர்ந்த 8 பேர் ஆம்னி வேனில் வந்துள்ளனர்.

சாத்தான்குளம் அருகே உள்ள சிந்தாமணி மீரான்குளம் பகுதியில் வந்த போது, ஓட்டுநரின் கட்டுப்பாட்டை இழந்த வேன் எதிர்பாராதவிதமாக சாலையோரம் இருந்த 50 அடி ஆழ கிணற்றுக்குள் பாய்ந்தது.இதில் அந்த காரில் வந்த சைனி கிருபாகரன், ஜெனிட்டா, எஸ்தர் ஹெர்சோம் ஆகிய மூவரும் வெளியே தப்பி வந்துள்ளனர். மேலும் இந்த வாகனத்தில் வந்த மோசஸ், வசந்தா, ரவி, ஒன்றரை வயது குழந்தையான ஸ்டாலின், ஹெத்சியாகிருபா ஆகியஐந்து பேரும் உள்ளே சிக்கிக் கொண்டனர். இதில் வெளியே வந்தவர்கள் அந்த வழியாக சென்ற வாகனத்தில் சென்றவர்களை தடுத்து நிறுத்தி நடந்த சம்பவத்தை கூறியுள்ளன

## வருடாந்திர ஆய்வு போக்குவரத்து வாகனங்களை ஆய்வு செய்து வரும் வட்டார போக்குவரத்து ஆய்வாளர்



தமிழ்நாடு அரசு போக்குவரத்து துறை வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் திருப்பூர் வடக்கு மற்றும் தெற்கு பகுதி அலுவலகங்கள் அவிநாசி மற்றும் காங்கேயம் பள்ளி வாகனம் கூட்டாய்வு சோதனை திருப்பூர் மாவட்டங்களில் பள்ளி பேருந்து ஆய்வு செய்த வடக்கு வட்டார போக்குவரத்து ஆய்வாளர், திருப்பூர் தெற்கு, அவினாசி, காங்கேயம் ஆகிய இடங்களில் மேற்கொள்ளப்பட்டு வந்தது ஆய்வு விவரங்கள்., மொத்த பள்ளி பேருந்துகளி ன் எண்ணிக்கை திருப்பூர்மாவட்டத்தில் 1346 ஆய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டது பள்ளி பேருந்துகளின் எண்ணிக்கை 665 சாலையில் ஓட்டி செல்ல ஏற்ற பள்ளி வாகனங்களின்மற்றும்பேருந்துகளின்எண்ணிக்கை 593 குறைபாடுகள் கண்டறியப்பட்ட பள்ளி பேருந்துகளின் எண்ணிக்கை 72 என்றும் வட்டார போக்குவரத்து அலுவலர் தெற்கு பெறுப்பு வடக்கு திரு. வெங்கடசாமி அவர்கள் தெரிவித்துள்ளார் மேலும் இதுபோன்ற ஆய்வுகள் இனி தொடர்ந்து நடைபெறும் என்றும் கூறினார், இதனை அப்பகுதி மக்கள் பெரிதும் பாராட்டி வருகின்றனர்....

## " ஜே.எம்.ஜே. மீடியா (PVT LTD) நடாத்திய மாபெரும் தற்கொலை ஒழிப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சி வெற்றிகரமாக நிறைவு




தற்கொலை என்பது எந்த சூழ்நிலையிலும் தீர்வாக அமைய முடியாது என்பதை வலியுறுத்தும் நோக்குடன் ஜே.எம்.ஜே. மீடியா (PVT LTD) நிறுவனம் நடாத்திய தற்கொலை ஒழிப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சி மிகுந்த விமர்சையுடன் நடை பெற்றது.

மனிதப் பிறவி என்பது ஒரு அரிய வரம். வாழ்க்கையில் தோல்விகள், சோதனைகள், மற்றும் துன்பங்கள் எதுவாக இருந்தாலும் அவை அனைத்தும் தற்காலிகமானவை. வாழ்க்கையின் உண்மை அழகு அதை நாம் எதிர்கொள்ளும் துணிச்சல் மற்றும் தைரியத்தில்தான் மறைந்துள்ளது.

இந்த விழிப்புணர்வு நிகழ்ச்சியின் முக்கிய நோக்கம், "வாழ்க்கையை நேசிக்கவும், உயிரை காக்கவும் " என்ற கருப்பொருளை அனைத்து மனிதர்களின் மனங்களிலும் ஆழமாக பதியச் செய்வதாகும். உலகம் முழுவதிலிருந்தும் பங்கேற்ற மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் சிந்தனையைத் தூண்டும் கவிதைகள் உயிரோட்டமுள்ள நாடகங்கள் மற்றும் அருமையான ஓவியங்களின் வாயிலாக தற்கொலை எதிர்ப்புச் செய்தியை பலமாக வெளிப்படுத்தினர்.

நிகழ்வின் சிறப்பு அம்சமாக மாணவர்கள் தங்களுடைய தனிப்பட்ட திறமைகளை வெளிப்படுத்துவதோடு தன்னம்பிக்கையையும் மன உறுதியையும் வலியுறுத்தினர். உலகளாவிய ஒருங்கிணைப்பாளர்களின் ஒத்துழைப்புடன் நிறுவனத்தின் பணிப்பாளர் தலைவி ஜஸூரா ஜலீல் அவர்களின் வழிகாட்டுதலின் கீழ் நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற்றது. பல்வேறு நாடுகள் மற்றும் கலாசாரங்களைச் சேர்ந்த மாணவர்கள் ஒன்றிணைந்து வாழ்க்கையின் அருமையை உணர்த்தும் நிகழ்வாக இதை மாற்றினர்.

"வாழ்க்கை என்பது ஒரு அழகான பயணம்" சிக்கல்கள் எதுவாக இருந்தாலும், அவற்றிற்கு தீர்வுகள் இருக்கின்றன. பேசுங்கள், பகிருங்கள், உயிரைக் காப்பாற்றுங்கள் . என்ற ஊக்கமூட்டும் வார்த்தைகளோடு நிகழ்ச்சி நிறைவடைந்தது.

இந்த நிகழ்வில் பாடசாலை மாணவர்கள், பொதுமக்கள், மற்றும் கல்லூரி மாணவர்கள் உட்பட அனைவரும் கலந்து கொண்டதோடு நாளைய தலைவர்களான சிறுவர்களும் ஆர்வத்துடன் கலந்து கொண்டதே இந்த நிகழ்வின் சிறப்பம்சமாகும்.



தினகனி



# 'அரசியல் உள்நோக்கத்தோடு சோதனை' அமலாக்கத்துறைக்கு அமைச்சர் முத்துசாமி கண்டனம்

சென்னை, மே.18



வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் சு. முத்துசாமி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டு இருப்பதாவது;

"சென்ற அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் லஞ்ச ஒழிப்புத்துறையால் பதிவு செய்யப்பட்ட வழக்குகளை அடிப்படையாகக் கொண்டு, தி.மு.க. ஆட்சியில் டாஸ்மாக் நிறுவனத்தில் முறைகேடுகள் நடைபெற்றதைப் போன்று சித்தரிப்பதற்காக, அரசியல் உள்நோக்கத்தோடு, கடந்த மாதம் டாஸ்மாக் நிறுவனத்தின் தலைமை அலுவலகத்தில் அமலாக்கத் துறை சோதனைகளை மேற்கொண்டது. இந்த சோதனைகளின் போது, டாஸ்மாக் நிறுவனத்தின் செயல்பாடுகளில் முறைகேடுகள் நடைபெற்றதற்கான எந்தவிதமான ஆதாரமும் கிடைக்காத நிலையில், ஆயிரம் கோடி ருபாய் ஊழல் நடைபெற்றதாக ஒரு கற்பனைச் செய்தியை அமலாக்கத் துறை வெளியிட்டது. இவ்வாறு வெளியிட்ட தவறான அறிக்கையை நியாயப்படுத்துவதற்காக, அமலாக்கத் துறை டாஸ்மாக் நிறுவன அலுவலர்களைத் தொடர்ந்து துன்புறுத்தி வருகிறது.

இதன் தொடர்ச்சியாக, நேற்று டாஸ்மாக் நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் மற்றும் சிலருடைய வீடுகளில் சோதனைகளை அமலாக்கத் துறை மேற்கொண்டுள்ளது. இந்த சோதனைகளின் போதும், எந்தவிதமான ஆதாரங்களும் கிடைக்காத நிலையில், அரசு அலுவலர்களை அமலாக்கத் துறை தொடர்ந்து துன்புறுத்தியும், கட்டாயப்படுத்தியும் வருகிறது. பல அமலாக்கத் துறை வழக்குகளில், மாண்பமை உச்ச நீதி மன்றம் விதித்துள்ள வழிமுறைகளைத் தொடர்ந்து மீறி, இவ்வாறு அமலாக்கத் துறை மேற்கொண்டுவரும் அரசியல் பழிவாங்கல் நடவடிக்கைகளுக்கு, தமிழ்நாடு அரசின் சார்பாக எனது கடும் கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த நடவடிக்கைகளுக்கு எதிராகத் தேவையான அனைத்து சட்டபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொண்டு, நமது அலுவலர்களுடன் தமிழ்நாடு அரசு எப்போதும் துணை நிற்கும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்."

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# டாஸ்மாக் மேலாண் இயக்குநர் வீட்டில் 2வது நாளாக தொடரும் அமலாக்கத்துறை சோதனை

சென்னை, மே.18

சென்னை எழும்பூரில் உள்ள 'டாஸ்மாக்' தலைமை அலுவலகத்தில் பல்வேறு புகார்கள் அடிப்படையில் கடந்த மார்ச் மாதம் அமலாக்கத்துறை அதிகாரிகள் அதிரடி சோதனை நடத்தினார்கள். இந்த சோதனையில் ரூ.1,000 கோடி அளவுக்கு முறைகேடு நடந்துள்ளதை கண்டறிந்து அமலாக்கத்துறை அறிக்கை வெளியிட்டது.



தமிழக அரசு நிறுவனமான டாஸ்மாக்கில் அமலாக்கத்துறை சோதனை மற்றும் விசாரணை நடத்த தடை கோரி தமிழக அரசு சார்பிலும், 'டாஸ்மாக்' நிர்வாகம் சார்பிலும் சென்னை ஐகோர்ட்டு மற்றும் சுப்ரீம் கோர்ட்டில் வழக்கு தொடரப்பட்டது. இந்த வழக்கில் அமலாக்கத்துறை விசாரணைக்கு தடை விதிக்க கோர்ட்டு மறுத்துவிட்டது.

இதனை தொடர்ந்து சென்னை மணப்பாக்கத்தில் உள்ள டாஸ்மாக் மேலாண்மை இயக்குனர் விசாகன் வீடு உள்ளிட்ட இடங்களில் அமலாக்கத்துறை அதிகாரிகள் நேற்று அதிரடி சோதனை நடத்தினர். அதேபோல், தேனாம்பேட்டையில் உள்ள சினிமா தயாரிப்பாளர் ஆகாஷ் பாஸ்கரின் வீட்டிலும் அமலாக்கத்துறை சோதனை நடைபெற்றது.

இந்நிலையில், டாஸ்மாக் மேலாண்மை இயக்குனர் விசாகன் மற்றும் சினிமா தயாரிப்பாளர் பாஸ்கர் வீடுகளில் இன்று 2வது நாளாக அமலாக்கத் துறையினர் சோதனை நடத்தி வருகின்றனர்.

# 6 சவரன் நகைக்காக பெண் கொலை




நீலகிரி, மே.18

நீலகிரி மாவட்டம் கூடலூரை சேர்ந்தவர் முகமது மற்றும் மைமுனா தம்பதிகள். இவர்கள் வீட்டில் தனியாக வசித்து வந்த நிலையில் முகமது அருகில் உள்ள தனியார் நிறுவனத்தில் காவலாளியாக பணியாற்றி வருகிறார். நேற்று வெள்ளிக்கிழமை என்பதால் மதியம் தொழுகையை முடித்துவிட்டு 1 மணிக்கு மேல் வேலைக்கு சென்றார்.

பின்னர் இவர் தனது மனைவிக்கு போன் செய்தார். மைமுனா போனை எடுக்காத நிலையில் இன்று அதிகாலை 2 மணியளவில் வீட்டுக்கு வந்து பார்த்தபோது வீட்டின் முன் கதவு அடைக்கப்பட்டு இருந்தது. இதனையடுத்து உடனடியாக அக்கம் பக்கத்தினர் உதவியுடன் கதவை உடைத்து உள்ளே சென்றார். அப்போது மைமுனா முகம், கை, காலகளில் வெட்டுக்காயங்களுடன் ரத்த வெள்ளத்தில் கிடந்ததை பார்த்து அதிர்ச்சியடைந்தார்.

இது குறித்து தகவலறிந்த போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்தனர். உடலை ஆய்வு செய்த போலீசார் பெண்ணின் 6 சவரன் நகைகள் திருடு போனதை கண்டுபிடித்தனர். இது குறித்து வழக்குப் பதிவு செய்த போலீசார் 6 சவரன் நகைக்காக பெண் கொல்லப்பட்டாரா? என்ற கோணத்தில் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# திருச்செந்தூர் கடலில் கரை ஒதுங்கிய பெண் பிணம்; அதிர்ச்சி சம்பவம்




தூத்துக்குடி மே.18

திருச்செந்தூர் அமலிநகர் கடற்கரையில் நேற்று மதியம் சுமார் 50 வயது மதிக்கத்தக்க பெண்ணின் உடல் இறந்த நிலையில் கரை ஒதுங்கி கிடந்தது. இதனால் அதிர்ச்சியடைந்த அப்பகுதி மக்கள் உடனடியாக போலீசாருக்கு தகவல் கொடுத்தனர்.

தகவலறிந்து விரைந்து வந்த திருச்செந்தூர் கடலோர பாதுகாப்பு குழும போலீசார் இறந்த பெண்ணின் உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைத்தனர்.

இதையடுத்து வழக்குப்பதிவு செய்து விசாரணையை தொடங்கிய போலிசார், இறந்த நிலையில் கரை ஒதுங்கிய பெண் யார்? எந்த ஊரை சேர்ந்தவர்? கடலில் குளித்தபோது அலையில் சிக்கி தண்ணீரில் மூழ்கி இறந்தாரா? அல்லது வேறு ஏதேனும் காரணமா? என்பது குறித்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# திருநெல்வேலி: போக்சோ வழக்கு குற்றவாளிக்கு 5 ஆண்டுகள் சிறை தண்டனை



திருநெல்வேலி, மே.18

கடந்த 2022ம் ஆண்டு ஆனைக்குடி, பெருமாள்புரம், நடுத்தெருவை சேர்ந்த முத்து (வயது 39), ஒரு சிறுமியை பாலியல் ரீதியாக துன்புறுத்தி கொலை மிரட்டல் விடுத்துள்ளார். இதுகுறித்து சிறுமியின் பெற்றோர் வள்ளியூர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் அளித்தனர். அதன் பேரில் வள்ளியூர் காவல்துறையினர் விசாரணை மேற்கொண்டு முத்து மீது வழக்குப்பதிவு செய்து போக்சோ சட்டத்தின் கீழ் கைது செய்தனர்.

இவ்வழக்கு விசாரணை திருநெல்வேலி மாவட்ட போக்சோ நீதிமன்றத்தில் நடைபெற்று வந்த நிலையில் நீதிபதி சுரேஷ்குமார் வழக்கை விசாரித்து போக்சோ வழக்கு குற்றவாளியான முத்துவுக்கு போக்சோ, கடத்தல், கொலை மிரட்டல் ஆகிய பிரிவுகளுக்கு தலா 5 ஆண்டுகள் சிறை தண்டனையினை ஏக காலத்தில் அனுபவிக்கவும் மற்றும் ரூ.15 ஆயிரம் அபராதமும், அபராதம் கட்ட தவறினால் 2 1/2 ஆண்டுகள் சிறை தண்டனையும் விதித்து தீர்ப்பளித்தார்.

இவ்வழக்கில் திறம்பட புலன் விசாரணை செய்து சாட்சிகளை விரைவாக நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி குற்றவாளிக்கு தண்டனை பெற்றுக் கொடுத்த வள்ளியூர் உட்கோட்ட டி.எஸ்.பி. வெங்கடேஷ் மற்றும் வள்ளியூர் காவல் துறையினரையும், குற்றவாளிக்கு தண்டனை பெற்றுத்தர திறம்பட வாதிட்ட அரசு தரப்பு வழக்கறிஞர் உஷா, புலன் விசாரணை செய்த போலீஸ் இன்ஸ்பெக்டர் ராஜகுமாரி ஆகியோரை திருநெல்வேலி மாவட்ட எஸ்.பி. சிலம்பரசன் பாராட்டினார்.

# செல்போனில் பேசியதை பெற்றோர் கண்டித்ததால் வீட்டு மாடியில் இருந்து குதித்த மாணவி

கன்னியாகுமரி மே.18

கன்னியாகுமரி மாவட்டம் அருமனை அருகே முழுக்கோடு பகுதியை சேர்ந்தவர் 16 வயது மாணவி. இவர் தற்போது பிளஸ்1 முடித்து பிளஸ்2 வகுப்புக்கு செல்ல உள்ளார். மாணவி எப்போதும் நண்பர்களுடன் நீண்ட நேரம் செல்போனில் பேசிகொண்டிருப்பது வழக்கம். இதை பெற்றோர் கண்டித்துள்ளனர். ஆனாலும், செல்போனில் நண்பர்களுடன் பேசுவதை மாணவி நிறுத்தவில்லை. இந்தநிலையில் மாணவி வீட்டில் நீண்ட நேரம் செல்போனில் பேசிக்கொண்டிருந்தார். பெற்றோர் மாணவியை கண்டித்துள்ளனர். இதனால் மனமுடைந்த மாணவி திடீரென வீட்டின் மாடிக்கு சென்று அங்கிருந்து கீழே குதித்துள்ளார். இதில் அவர் படுகாயமடைந்தார். இதனால் அதிர்ச்சியடைந்த மாணவியின் பெற்றோர் மகளை மீட்டு ஆசாரிபள்ளம் அரசு மருத்துவமனையில் அனுமதித்தனர். அங்கு அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. இந்த சம்பவம் குறித்து அறிந்த போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# 4 மசோதாக்களுக்கு கவர்னர் ஆர்.என்.ரவி ஒப்புதல்

சென்னை, மே.18

கடந்த மார்ச் 14 முதல் ஏப். 29 வரை நடந்த சட்டமன்ற கூட்டத்தொடரில் 18 மசோதாக்கள் குரல் வாக்கெடுப்பு மூலம் நிறைவேற்றப்பட்டு கவர்னர் ஆர் என் ரவிக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

நீண்ட நாட்களாக கவர்னரின் ஒப்புதலுக்காக காத்திருந்த நிலையில் இன்று 4 சட்ட திருத்த மசோதாக்களுக்கு கவர்னர் ஆர்.என். ரவி ஒப்புதல் வழங்கி உள்ளார். 4 மசோதாக்களையும் நிதித்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு பேரவையில் தாக்கல் செய்திருந்தார்.

# சென்னையில் இருந்து 2 விமானங்களில் 843 பேர் ஹஜ் பயணம்: அமைச்சர் நாசர் வழியனுப்பி வைத்தார்

சென்னை, மே.18

இஸ்லாமியர்களின் 5 கடமைகளில் ஒன்று புனித ஹஜ் பயணம் ஆகும். துல் ஹஜ் மாதத்தில் இந்த கடமையை நிறைவேற்ற இஸ்லாமியர்கள் சவுதி அரேபியாவில் உள்ள புனித மெக்கா நகருக்கு செல்வார்கள்.

நேற்று புனித ஹஜ் பயணத்திற்காக, முதல் ஹஜ் விமானம் சென்னை மீனம்பாக்கம் அண்ணா பன்னாட்டு விமான நிலையத்தில் இருந்து சவுதி அரேபியா ஜித்தா நகருக்கு 200 பெண்கள் உள்பட 402 பேருடன் புறப்பட்டு சென்றது. ஒரே நாளில் 2வது விமானம் 441 பேருடன் சென்றது.

புனித பயணம் செல்பவர்களை அமைச்சர் நாசர், தமிழ்நாடு வக்பு வாரிய தலைவர் நவாஸ்கனி எம்.பி., தமிழ்நாடு ஹஜ் கமிட்டி தலைவர் அப்துல் சமது எம்.எல்.ஏ., தென் மண்டல ஹஜ் கமிட்டி உறுப்பினர் ஹசன் மவுலானா எம்.எல்.ஏ., ஹஜ் கமிட்டி செயலாளர் எம்.ஏ. சித்திக், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை செயலாளர் விஜயராஜ் குமார், சிறுபான்மை நலவாரிய துணை தலைவர் இறையன்பன் குத்துஸ், அகமது அலி உள்பட ஹஜ் கமிட்டி உறுப்பினர்கள் வழியனுப்பி வைத்தனர்.



இதுகுறித்து அமைச்சர் நாசர் செய்தியாளர்களிடம் கூறுகையில், 'முதல் நாளாக 2 விமானங்களில் 843 பேர் ஹஜ் பயணத்தை மேற்கொண்டு உள்ளனர். சென்னையில் இருந்து தமிழகத்தை சேர்ந்த 5,730 பேர் வருகிற 30ந்தேதி வரை 14 விமானங்களில் புனித பயணம் செல்கின்றனர். மேலும் தமிழ்நாட்டை சேர்ந்த 323 பேர் பெங்களூரு, மும்பை, ஐதராபாத், கொச்சி, கோழிக்கோடு விமான நிலையங்களில் இருந்து புறப்பட்டு செல்கின்றனர்.

ஹஜ் பயணம் செல்லும் 200 நபர்களுக்கு ஒருவர் என்ற வீதம் ஏற்கனவே அவர்களுக்கு வகுப்புகள் எடுக்கப்பட்டு, அவர்கள் தங்கும் இடம், தேவையான உணவு, புனித பயணத்தை மேற்கொள்வதற்கான வழிக்காட்டுதல் உள்ளிட்ட அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அவற்றை கண்காணிக்க அலுவலகர்களை நியமித்து இருக்கிறோம். இந்த அலுவலர்கள் தமிழகத்தை சேர்ந்தவர்கள்தான்.

தி.மு.க. அரசு பொறுப்பேற்ற பிறகு சிறுபான்மை மக்கள் மீது உள்ள அக்கறையின் காரணமாக ஒவ்வொருக்கும் ரூ.25 ஆயிரம் மானியமாக கொடுத்து வருகிறோம். இந்த ஆண்டு மட்டும் ரூ.14 கோடியே 21 லட்சத்து 75 ஆயிரம் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு ஹஜ் பயணத்திற்கு விண்ணப்பித்த அனைவருக்கும் மானியம் கொடுக்கப்பட்டு உள்ளது' என கூறினார்.

# அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர் வீட்டில் லஞ்ச ஒழிப்பு போலீசார் சோதனை



திருவண்ணாமலை மே.18

திருவண்ணாமலை மாவட்டம் ஆரணி தொகுதி அ.தி.மு.க. எம்.எல்.ஏ. சேவூர் ராமச்சந்திரன். இவர் கடந்த அ.தி.மு.க. ஆட்சியில் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சராக செயல்பட்டுள்ளார். இந்நிலையில், சேவூர் ராமச்சந்திரனின் வீட்டில் லஞ்ச ஒழிப்பு போலீசார் சோதனை நடத்தி வருகின்றனர். அவரின் மகன்களான விஜயகுமார், சந்தோர்குமார் வீடுகளிலும் சோதனை நடைபெற்று வருகிறது.

# தி.மு.க.வில் கூடுதல் இடங்கள் கிடைக்காவிட்டால் த.வெ.க.வுடன் கூட்டணி.. காங்கிரஸ் நிர்வாகிகள் வலியுறுத்தல்



சென்னை, மே.18

தமிழ்நாடு காங்கிரஸ் மேலிட பொறுப்பாளர் கிரிஷ் சோடங்கர் கடந்த 2 நாட்களாக கட்சி நிர்வாகிகளை சந்தித்து ஆலோசனை நடத்தி வருகிறார். சத்தியமூர்த்தி பவனில் நடைபெற்ற நிர்வாகிகள் சந்திப்பின் போது மாவட்டத் தலைவர்கள் இல்லாமல் இருக்கும் 11 மாவட்டங்களை சேர்ந்த பொறுப்பாளர்கள், கவுன்சிலர்கள், கிராம கமிட்டி நிர்வாகிகள் மற்றும் கோவை மாவட்ட கட்சி நிர்வாகிகளிடம் ஆலோசனை நடத்தினார்.

அப்போது, மாவட்ட பொறுப்பாளர்கள், "நாம் காலம் காலமாக தி.மு.க. கூட்டணியில் இருந்து வருகிறோம். இந்த கூட்டணியால் அவர்கள் (தி.மு.க.) தான் பலமானார்களே தவிர நமக்கு எந்த பயனும் இல்லை. வருகிற 2026 சட்டமன்ற தேர்தலில் தி.மு.க. கூட்டணியில் கூடுதல் இடங்களை கேட்டுப் பெற வேண்டும். அதே போன்று ஆட்சி அதிகாரத்திலும் பங்கு பெற வேண்டும். ஒருவேளை இதற்கு தி.மு.க. ஒத்துக் கொள்ளவில்லை என்றால் நடிகர் விஜய் புதிதாக தொடங்கி உள்ள தமிழக வெற்றிக் கழகத்துடன் கூட்டணி அமைப்பது குறித்து கட்சி மேலிடத்தில் நீங்கள் (கிரிஷ் சோடங்கர்) பேச வேண்டும்" என்று தெரிவித்து உள்ளனர்.

இதே போன்று, கவுன்சிலர்களுடன் நடத்திய ஆலோசனையின்போது, சென்னை மாநகர மாமன்ற காங்கிரஸ் கட்சி தலைவர் பதவியில் இருந்து திரவியத்தை மாற்ற வேண்டும் என்று கவுன்சிலர்கள் தெரிவித்து உள்ளனர்.

# கும்பக்கரை அருவியில் குளிக்க தடை



தேனி, மே.18

தேனி மாவட்டம் பெரியகுளம் அருகே மேற்கு தொடர்ச்சி மலை அடிவாரத்தில் கும்பக்கரை அருவி அமைந்துள்ளது.

இந்த அருவிக்கு தேனி மாவட்டம் மட்டுமின்றி, தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் இருந்தும் தினமும் ஏராளமான சுற்றுலா பயணிகள் வருகை தருகின்றனர். இந்த அருவிக்கு கொடைக்கானல் மலைப்பகுதி மற்றும் மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதிகளில் இருந்து நீர்வரத்து இருக்கும்.

இந்நிலையில், கடந்த சில நாட்களாக கும்பக்கரை அருவியின் நீர்ப்பிடிப்பு பகுதிகளில் கனமழை பெய்து வருகிறது. இதனால் அருவியின் பாதுகாப்பு கம்பிகள் சேதமடைந்துள்ளது.

இந்த நிலையில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இதையடுத்து பாதுகாப்பு கருதி, ஒரு நாள் மட்டும் சுற்றுலா பயணிகள் அருவியில் குளிக்க வனத்துறையினர் தடை விதித்துள்ளனர்.

# பையில் வைத்து சாலையோரம் வீசப்பட்ட பச்சிளம் பெண் குழந்தை

தஞ்சாவூர், மே.18

தஞ்சை மாவட்டம் திருவோணத்தை அடுத்துள்ள மணிக்கிரான் விடுதி மேயா குளக்கரை அருகே நேற்று காலை குழந்தையின் அழுகுரல் கேட்டுள்ளது. அந்த வழியாக சென்றவர்கள் அங்கு சென்று பார்த்தபோது ஒரு பச்சிளம் பெண் குழந்தை துணிப்பையில் வைத்து சாலையோரம் வீசப்பட்டு கிடந்தது. இதனைக்கண்டு அதிர்ச்சியடைந்த அந்த கிராம மக்கள் இதுகுறித்து போலீசாருக்கு தகவல் கொடுத்தனர். தகவல் அறிந்ததும் அங்கு விரைந்து சென்ற திருவோணம் போலீசார், பச்சிளம் பெண் குழந்தையை மீட்டு திருவோணம் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு கொண்டு சென்றனர். அங்கு குழந்தையை பரிசோதித்த திருவோணம் வட்டார மருத்துவ அலுவலர் காயத்ரி தலைமையிலான மருத்துவர்கள் மீட்கப்பட்ட பெண் பச்சிளம் குழந்தைக்கு முதலுதவி சிகிச்சை அளித்தனர். 2½ கிலோ எடையுடன் அந்த குழந்தை நல்ல நிலையில் உள்ளதாக மருத்துவர்கள் தெரிவித்தனர். சாலையோரம் கிடந்து மீட்கப்பட்ட அந்த குழந்தையின் தாய் யார்? எதற்காக அந்த குழந்தையை சாலையோரம் போட்டு விட்டு சென்றார்? என்பது உள்பட பல்வேறு கோணங்களில் திருவோணம் போலீசார் மற்றும் வருவாய்துறை அலுவலர்கள் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# கரூர் அருகே பயங்கர விபத்து சிறுமி உள்பட 4 பேர் பலி

கரூர், மே.18





தூத்துக்குடியில் இருந்து சுற்றுலாவுக்காக கரூர் மாவட்டத்திற்கு வேனில் சிலர் சென்றுகொண்டிருந்தனர். இந்த நிலையில் கரூர் வெண்ணெய்மலை அருகே வேன் சென்று கொண்டிருந்தது. அப்போது எதிர் திசையில் சேலத்திலிருந்து கரூர் நோக்கிச் சென்ற சொகுசு பேருந்து, முன்னால் சென்ற டிராக்டர் மீது மோதி சாலை தடுப்புச்சுவரைத் தாண்டி எதிர்த்திசையில் வந்த சுற்றுலா வாகனத்தின் மீது நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானது.

இந்த கோர விபத்தில் எதிர்பாராதவிதமாக சிறுமி தக்சிகா (வயது 8), சிறுவன், சுற்றுலா வேன் ஓட்டுநர் உள்பட 4 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர். மேலும் விபத்தில் சிக்கி 15க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். இது குறித்து தகவலறிந்த போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்தனர்.

இந்த விபத்தில் காயமடைந்தவர்கள் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர். சுற்றுலாவிற்கு வந்த 4 பேர் பரிதாபமாக உயிரிழந்த சம்பவம் பெரும் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது. விபத்து தொடர்பாக வழக்குப்பதிவு செய்த போலீசார் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

# வடகாட்டில் இரு சமூகத்தினர் மோதல்; விசாரணை அறிக்கை 2 நாளில் ஆணையத்தில் சமர்ப்பிக்கப்படும்: எஸ்சி, எஸ்டி நல ஆணைய இயக்குனர் தகவல்



புதுக்கோட்டை வடகாடு கிராமத்தில் இரு சமூகத்தினர் மோதல் தொடர்பான விசாரணை அறிக்கை 2 நாளில்தேசிய ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர்நல ஆணையத்தில் சமர்ப்பிக்கப்படும் என்று ஆணைய இயக்குனர் ரவிவர்மன் தெரிவித்தார். புதுக்கோட்டை மாவட்டம் வடகாடு கிராமத்தில் கடந்த 5ம் தேதி இருசமூகத்தினர்இடையே மோதல் ஏற்பட்டது.

இதில் குடிசை மற்றும் இருசக்கர வாகனம், கார் ஆகியவை சேதப்படுத்தப்பட்டன. இது தொடர்பாக இதுவரை இரண்டு சமூகத்தைச் சேர்ந்த 29 பேர் கைது செய்யப்பட்டனர். இந்த மோதலில் காயமடைந்த 20 பேர் புதுக்கோட்டை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்நிலையில் தேசிய ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல ஆணைய இயக்குனர் ரவிவர்மன் மற்றும் அதிகாரிகள் வடகாடு கிராமத்திற்கு நேற்று சென்று பாதிக்கப்பட்ட மக்களை சந்தித்து விசாரணை நடத்தினர். இதன் பின்னர் புதுக்கோட்டை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் கைதி வார்டில் சிகிச்சை பெற்று வரும் ஆதிதிராவிடர் மக்களை சந்தித்து விசாரணை நடத்தினார். இதன்பின் இயக்குனர் ரவிவர்மன் நிருபர்களிடம் கூறும்போது, வடகாடு பிரச்னை தொடர்பாக தற்போது விசாரணை நடைபெற்று வருகிறது. அதன் அறிக்கை 2 நாளில் தேசிய ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர்நல ஆணையம் தலைமையகத்துக்கு அறிக்கையாக சமர்ப்பிக்கப்படும் என்றார்.

# ஒடுகத்தூர் சந்தையில் ரூ.20 லட்சத்திற்கு ஆடுகள் விற்பனை



ஒடுகத்தூர், மே.18

ஒடுகத்தூர் சந்தையில் இன்று ரூ.20 லட்சத்திற்கு ஆடுகள் விற்பனையானது. வேலூர் மாவட்டம் ஒடுகத்தூரில் வெள்ளிக்கிழமை தோறும் ஆட்டுச்சந்தை நடைபெறுகிறது. இங்கு வெளிமாவட்டங்கள், வெளிமாநிலங்களில் இருந்து ஏராளமானோர் ஆடுகளை விற்பனைக்காக கொண்டு வருகின்றனர். தற்போது வேலூர் மற்றும் திருப்பத்தூர் மாவட்டங்களில் கோயில் திருவிழாக்களின் சீசன் களைகட்டி வருகிறது. அதற்கேற்ப வெள்ளிக்கிழமையான இன்று காலை 6 மணிக்கு ஆட்டுச்சந்தை வழக்கம்போல் கூடியது. திருவிழா சீசனையொட்டி பல்வேறு பகுதிகளில் இருந்து ஏராளமான ஆடுகளை விற்பனைக்கு கொண்டுவந்தனர். விற்பனையும் விறுவிறுப்பாக இருந்தது. குறிப்பாக கருப்புநிற கிடாக்களின் விற்பனை அதிகரித்தது. இதனால் சந்தையில் வியாபாரம் களை கட்டியது. ஒரு ஜோடி ஆட்டின் விலை ரூ.20 ஆயிரம் முதல் ரூ.25 ஆயிரம் வரை விற்பனையானது. இன்று ரூ.20 லட்சத்திற்கு மேல் வர்த்தகம் நடந்ததாக வியாபாரிகள் தெரிவித்தனர்.

# திருப்பதி கலப்பட நெய் விவகாரம்: திண்டுக்கல் ஏ.ஆர்.டெய்ரி நிறுவன உரிமத்தை சஸ்பெண்ட் செய்த உத்தரவு ரத்து



சென்னை, மே.18


திண்டுக்கல் ஏ.ஆர். டெய்ரி நிறுவன உரிமத்தை சஸ்பெண்ட் செய்த உத்தரவு ரத்து செய்யப்பட்டுள்ளது. திருப்பதி ஏழுமலையான் கோயிலில் பக்தர்களுக்கு வழங்கப்படும் பிரசாதமான லட்டு தயாரிக்க பயன்படுத்தப்பட்ட நெயில் விலங்கு கொழுப்பு கலக்கப்படுவதாக கூறி பெரும் சர்ச்சை எழுந்தது. இதையடுத்து திண்டுக்கல் ஏ.ஆர்.டெய்ரி நிறுவன உரிமத்தை நிறுத்தி வைத்து உணவு பாதுகாப்பு தர நிர்ணய ஆணையம் உத்தரவு பிறப்பித்தது.

இந்த உத்தரவை எதிர்த்து ஏ.ஆர்.டெய்ரி நிறுவனம் சார்பில் ஐகோர்ட் மதுரை கிளையில் வழக்கு தொடரப்பட்டது.

இந்த வழக்கு நீதிபதி வீ.லட்சுமி நாராயணன் முன்பு விசாரணைக்கு வந்தது. அப்போது நெய் மட்டுமின்றி பால் பொருள் உற்பத்திக்கான உரிமத்தை சஸ்பெண்ட் செய்ததால் நிறுவனம் பெரிதும் பாதிப்புக்குள்ளானதாகவும், தொழிலாளர்களின் வாழ்வாதாரம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் மனுதாரர் தரப்பு வாதிடப்பட்டது. இதனை பதிவு செய்து கொண்ட ஐகோர்ட் கிளை தீர்ப்பை தள்ளிவைத்தது.

இந்நிலையில், சென்னை உயர்நீதிமன்றத்தில் இந்த வழக்கானது நீதிபதி லட்சுமி நாராயணன் முன்பு விசாரணைக்கு வந்தது. ஏ.ஆர்.டெய்ரி நிறுவனத்தின் உரிமத்தை நிறுத்தி வைக்கப்பட்ட உத்தரவை ரத்து செய்து உத்தரவிட்டுள்ளார். மேலும், இந்த விவகாரம் குறித்து மறுபரிசீலனை செய்யும்படி உணவு பாதுகாப்பு மற்றும் தரம் நிர்ணயம் ஆணைய உரிமம் வழங்கும் அதிகாரிக்கு உத்தரவிட்டுள்ளார். மறுபரிசீலனை செய்யும் வரை நெய் உற்பத்திக்கான உரிமம் மட்டும் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக கருதவேண்டும் எனவும், உரிமம் நிறுத்தி வைத்த உத்தரவு 6 வாரங்களுக்கு மட்டுமே நடைமுறையில் இருக்க வேண்டும் என்றும் நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

# முதியவரை கட்டையால் தாக்கியவர் கைது




திருநெல்வேலி மே.18

நெல்லை மாவட்டம், வீரவநல்லூர், வெள்ளாங்குழி, தெற்கு தெருவை சேர்ந்த சொள்ளமுத்து (வயது 80) மனைவி 6 ஆண்டுகளுக்கு முன்பு இறந்து விட்டதால், மேற்சொன்ன முகவரியில் தனியாக வசித்து வருகிறார். இந்நிலையில் சொள்ளமுத்து, அவரது உடன்பிறந்த சகோதரர் நடராஜன் மகன் முருகன் பராமரிப்பில் இருந்து வருகிறார். எனவே சொள்ளமுத்துவிற்கு சொந்தமான வீட்டை முருகனுக்கு எழுதி கொடுத்துள்ளார். இதனை மனதில் வைத்து கொண்டு அவரின் உடன்பிறந்த இரண்டாவது சகோதரர் சுடலைமுத்து மகனான பாபநாசபெருமாள்(44) சொள்ளமுத்து வீட்டின் முன்பு நின்று கொண்டிருந்தபோது அங்கு வந்து அவரை அவதூறாக பேசி கையாலும், கட்டையாலும் தாக்கி ரத்தக்காயம் ஏற்படுத்தி மிரட்டல் விடுத்து சென்றுள்ளார். இதுகுறித்து சொள்ளமுத்து வீரவநல்லூர் காவல் நிலையத்தில் புகார் அளித்தார். அதன் அடிப்படையில் சப் இன்ஸ்பெக்டர் லியோ ரேனிஷ் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு பாபநாசபெருமாளை நேற்று (16.5.2025) கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்த நடவடிக்கை எடுத்தார்.

# வாலிபரை கையால் தாக்கி மிரட்டியவர் கைது

திருநெல்வேலி மே.18

நெல்லை மாவட்டம், மானூர், மேலபிள்ளையார் குளம், கஸ்பா தெருவை சேர்ந்த மனோஜ்குமார் (வயது 18) 13.5.2025 அன்று தனது நண்பர்களுடன் காளியம்மன் கோவில் திருவிழாவிற்கு சென்று கொண்டிருந்தார்.

அப்போது எதிரே காரில் வந்த அதே ஊரைச் சேர்ந்த சக்திசெல்வம்(19) என்பவர் மேலே விடுவது போல் வந்துள்ளார்.

இதனை மேலப்பிள்ளையார்குளம் சர்ச் அருகே வைத்து மனோஜ்குமார் சக்திசெல்வத்திடம் மேற்சொன்ன சம்பவத்தைப் பற்றி கேட்டுள்ளார். அப்போது அதற்கு சக்திசெல்வம், நீ எப்படி என்னை கேட்பாய் என்று அவதூறாக பேசி கையால் தாக்கி மிரட்டல் விடுத்து சென்றுள்ளார்.

இதுகுறித்து மனோஜ்குமார் மானூர் காவல் நிலையத்தில் புகார் அளித்தார். அதன் அடிப்படையில் சப் இன்ஸ்பெக்டர் விஜயகுமார் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு சக்திசெல்வத்தை கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்த நடவடிக்கை எடுத்தார்.

# குடிபோதையில் வாகனம் ஓட்டி உயிரிழப்பை ஏற்படுத்தினால் 10 ஆண்டுகள் சிறை

திருநெல்வேலி, மே.18

திருநெல்வேலி மாவட்ட எஸ்.பி. சிலம்பரசன் வெளியிட்டுள்ள சாலை விபத்துகள் தடுப்பு நடவடிக்கைகள் குறித்த பொதுமக்கள் விழிப்புணர்வுக்கான அறிவிப்பில் கூறியிருப்பதா வது:

திருநெல்வேலி மாவட்டத்தில் சாலை விபத்து களை தடுக்கும் நோக்கில், மாவட்ட காவல்துறையின் சார்பில் பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகின்றன.

சாலை விதிகளை மீறுபவர்கள் மீது எந்தவித பாரபட்சமுமின்றி, சட்டப்படி உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. விபத்துகள் நிகழும் பகுதிகளில் மோட்டார் வாகனத்துறை மற்றும் பிற சம்பந்தப்பட்ட துறைகளு டன் இணைந்து, காவல்துறையால் கூட்டு ஆய்வுகள் நடத்தப்பட்டு, தகுந்த முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மேலும், குடிபோதை யில் வாகனம் இயக்குவோர் மீது கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. குடிபோதையில் வாகனம் ஓட்டி ஒருவர் உயிரிழப்பை ஏற்படுத்தினால், பாரதிய நியாய சங்ஹிதா பிரிவு 105(2)ன் கீழ்வழக்குபதிவுசெய்யப்படும். இவ்வாறானகுற்றத்திற்கு நீதிமன்றத்தால் 10 ஆண்டுகள் வரை சிறை தண்டனை, மற்றும் அபராதம் விதிக்கப்படும். அதேபோல், குடிபோதையில் வாகனம் ஓட்டி ஒருவர் காயம் ஏற்படுத்தினால், பிரிவு 110ன் கீழ் வழக்கு பதிவு செய்யப்படும். இக்குற்றத்திற்கு அதிகபட்சம் 7 ஆண்டுகள் வரை சிறை தண்டனை மற்றும் அபராதமும் விதிக்கப்படும்.

ஏனெனில் குடிபோதையில் வாகனம் இயக்கும் நபர், தன்னுடைய நிலைமையை நன்கு அறிந்து, தன்னால் இயல்பாக வாகனத்தினை செலுத்த இயலாது என்பதனை தெரிந்து, வாகனத்தை இயக்கி பிறரது உயிருக்கும் உடலுக்கும் தீங்கினை ஏற்படுத்தும் குற்றத்தினை செய்கிறார்.

பொதுமக்கள் தங்கள் உயிர் மற்றும் பிறரின் பாதுகாப்பிற்காக, மதுபோதையில் வாகனம் இயக்கும் செயல்களில் ஈடுபடாமல், சட்டப்படி பொறுப்புடன் நடந்து கொள்ள வேண்டும்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# டாஸ்மாக் ஊழல் வழக்குகளை சிபிஐக்கு மாற்ற வேண்டும்! அன்புமணி ராமதாஸ்



சென்னை, மே.18

பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:

தமிழ்நாடு அரசின் மது வணிக நிறுவனமான டாஸ்மாக்கில் நடந்த ஊழல்கள் தொடர்பாக அமலாக்கத்துறை கடந்த இரு நாட்களாக நடத்தி வரும் சோதனைகளில் வெளியாகியுள்ள செய்திகள் அதிர்ச்சி அளிக்கின்றன. மது கொள்முதல், ஒப்பந்தம் வழங்குதல் போன்றவை தொடர்பாக ஆட்சியாளர்களுக்கு நெருக்கமானவர்களால் டாஸ்மாக் மேலாண் இயக்குனர் உள்ளிட்ட அதிகாரிகள் எப்படியெல்லாம் ஆட்டுவிக்கப்பட்டனர் என்பதற்கான ஆதாரங்கள் வெளியாகியுள்ள நிலையில், இவற்றுக்கு காரணமான மூல வழக்குகளை விசாரணையின்றி ஒழித்துக்கட்ட ஆட்சியாளர்கள் முயல்வது கண்டிக்கத்தக்கது.

டாஸ்மாக் நிறுவனத்திற்கான போக்குவரத்து ஒப்பந்தம், பார் ஒதுக்கீடு, மதுப்புட்டிகளுக்கு ரூ.10 முதல் ரூ.30 வரை கூடுதல் விலை வைத்து விற்பனை செய்தது, பணியாளர்களை பணியிடமாற்றம் செய்ய கையூட்டு வாங்கியது உள்ளிட்ட பல முறைகேடுகள் தொடர்பாக 40க்கும் மேற்பட்ட வழக்குகளை தமிழக காவல்துறையின் கையூட்டுத் தடுப்புப் பிரிவு பதிவு செய்துள்ளது. அவற்றின் அடிப்படையில் தான் டாஸ்மாக் மற்றும் அதனுடன் தொடர்புடைய மது ஆலைகளில் கடந்த மார்ச் 6ஆம் தேதி முதல் 3 நாட்களுக்கு அமலாக்கத்துறை சோதனை நடத்தியது. அதில், டாஸ்மாக் நிறுவனத்தில் குறைந்தது ரூ.1000 கோடி அளவுக்கு ஊழல் நடந்திருப்பதாகவும், அதன்மூலம் கிடைத்த பணம் சட்டவிரோதமான முறையில் பரிமாற்றம் செய்யப்பட்டிருப்பதாகவும் அமலாக்கத்துறை கடந்த மார்ச் மாதம் கூறியிருந்தது.

மார்ச் மாதம் நடத்திய சோதனையில் கிடைத்த தகவல்களின் அடிப்படையில் டாஸ்மாக் மேலாண்மை இயக்குனர் விசாகன், ஆட்சியாளர்களின் குடும்பத்தைச் சேர்ந்த திரைப்படத் தயாரிப்பாளர் ஆகாஷ் பாஸ்கரன் உள்ளிட்ட பலரது வீடுகளில் மே 16 ஆம் தேதி முதல் நடத்தப்பட்டு வரும் சோதனைகளில் புதிய தகவல்கள் வெளியாகியுள்ளன. டாஸ்மாக் மேலாண்மை இயக்குனர் விசாகனுடன் ஆட்சியாளர்களுக்கு நெருக்கமாக இருக்கும் சிலர் வாட்ஸ் ஆப் மூலம் நடத்திய தகவல் பரிமாற்றத்தில் எந்த நிறுவனத்தின் மது வகைகளை அதிக எண்ணிக்கையில் கொள்முதல் செய்ய வேண்டும்; யாருக்கு பார் ஒப்பந்தம் வழங்க வேண்டும்; வாகன ஒப்பந்தம் யாருக்கு வழங்க வேண்டும் என்பது குறித்த அறிவுறுத்தல்கள் வழங்கப் பட்டுள்ளன. அவற்றை டாஸ்மாக் மேலாண்மை இயக்குனரும் முழுமையாகசெய்துமுடித்ததற்கான ஆதாரங்களும் வெளியாகியுள்ளன. டாஸ்மாக் நிறுவன செயல்பாடுகளில் ஆட்சியாளர்களுக்கு வேண்டிய தரகர்களின் தலையீடு இருந்திருக்கிறது; ஊழல்கள் நடந்திருக்கின்றன என்பதற்கு இவையே சான்று.

டாஸ்மாக் நிறுவன மேலாண்மை இயக்குனரின் வீட்டில் தொடர்ந்து இரண்டாவது நாளாக நடத்தப்படும் சோதனைகளில் தொடர்ந்து பல ஆவணங்கள் கிடைத்து வருவதாக கூறப்படுகிறது. அதுமட்டுமின்றி, மேலாண்மை இயக்குனரிடம் அமலாக்கத்துறையில் தொடர்ந்து இரண்டாவது நாளாக அவரது வீட்டிலும், அமலாக்கத்துறை அலுவலகத்திலும் வைத்து விசாரணை நடத்தி வருகிறார்கள். விசாரணையின் முடிவில் டாஸ்மாக் ஊழல்கள் குறித்து மேலும் ஏராளமான தகவல்கள் வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தமிழ்நாட்டில் லட்சக்கணக்கான குடும்பங்கள் சீரழிவதற்குக் காரணமாக இருக்கும் டாஸ்மாக் நிறுவனம் தான் அரசுக்கு காமதேனுவாக பணத்தைக் கொட்டிக் கொண்டிருக்கிறது. அரசுக்கு மட்டுமின்றி, ஆட்சியாளர்களுக்கும் பணம் காய்க்கும் மரமாக திகழ்வது டாஸ்மாக் தான் என்பதை அண்மைக்காலமாக வெளியாகி வரும் செய்திகள் உறுதி செய்கின்றன. அரசுநிர்வாகத்தில்ஊழலை ஒழிக்கப் போவதாகக் கூறி ஆட்சிக்கு வந்த திமுக, அதற்கு மாறாக டாஸ்மாக்கை ஊழல் சுரங்கமாக மாற்றியிருப்பதுடன், அதில் சம்பந்தப்பட்டவர்களையும் பாதுகாக்கும் முயற்சியில் ஈடுபட்டிருப்பதாக குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன.

டாஸ்மாக் ஊழலை மூடி மறைக்கும் நோக்குடன் அது தொடர்பாக பதிவு செய்யப்பட்டிருக்கும் 40க்கும் மேற்பட்ட வழக்குகளை போதிய ஆதாரங்கள் இல்லை என்று மூடி விடும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது. ஏற்கனவே, சில வழக்குகள் மூடப்பட்டு விட்டதாகக் கூறப்படுகிறது. இதை அனுமதிக்க முடியாது.

டாஸ்மாக் நிறுவனத்தில் எந்த ஊழலும் நடக்கவில்லை என்றால், அதை தமிழகஅரசுதுணிச்சலுடன் எதிர்கொள்ள வேண்டும். ஆனால், டாஸ்மாக் ஊழல் வழக்கின் விசாரணைக்கு தமிழக அரசு தொடக்கம் முதலே முட்டுக்கட்டை போட்டு வருகிறது. டாஸ்மாக் நிறுவனத்தில் கடந்த மார்ச் மாதம் அமலாக்கத் துறை நடத்திய சோதனையை எதிர்த்து உச்சநீதி மன்றம் வரை சென்று தமிழக அரசு வழக்கு நடத்தியது. ஆனால், தமிழக அரசின் முயற்சிக்கு உச்சநீதி மன்றம் கண்டனம் தெரிவித்ததுடன், அமலாக்கத்துறை நடத்திய சோதனை சட்டப்பூர்வமானது தான் என்று சென்னை உயர்நீதிமன்றமும் தீர்ப்பு அளித்தது. அதனால், இந்த வழக்கிலிருந்து தப்பிப்பதற்கு வேறு வழியில்லாததால், அமலாக்கத்துறை சோதனைக்கு காரணமான மூல வழக்குகளை ஒன்றுமில்லாமல் செய்யும் வேலைகளில் அரசு ஈடுபட்டிருக்கிறது.

டாஸ்மாக்ஊழல்தொடர்பான மூல வழக்குகளை தமிழக அரசின் கட்டுப்பாட்டில் உள்ள கையூட்டுத் தடுப்புப் பிரிவு விசாரித்தால், தவறு செய்தவர்கள்தப்பவைக்கப்பட்டு விடுவார்கள்; அந்த வழக்குகளில் நீதி கிடைக்காது. எனவே, டாஸ்மாக் நிறுவனத்தில் நிகழ்ந்த ஊழல்கள், முறைகேடுகள் தொடர்பான 40க்கும் மேற்பட்ட வழக்குகளை சிபிஐ விசாரணைக்கு மாற்றி தமிழக அரசு ஆணையிட வேண்டும்.

இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

# மாணவர்களின் அடிப்படைத் திறன்களை மேம்படுத்த நடவடிக்கை ஆசிரியர்களுக்கு பள்ளிக்கல்வித்துறை அறிவுறுத்தல்




சென்னை, மே.18

அரசு பள்ளிகளில் படிக்கும் மாணவர்களின் அடிப்படை திறன்களை மேம்படுத்த ஆசிரியர்களுக்கு பள்ளிக்கல்வித்துறை அறிவுறுத்தி உள்ளது. இது தொடர்பாக தமிழக பள்ளிக் கல்வித்துறை வெளியிட்டுள்ள அறிக்கையில்,

தமிழ்நாடு அரசின் பள்ளிக்கல்வித்துறை தமிழ், ஆங்கிலம், கணிதம் மற்றும் அறிவியல் பாடங்களில் மாணவர்களின் அடிப்படை திறன்களை மேம்படுத்தும் நோக்கில் "திறன்கள்" என்ற திட்டத்தினை அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் நடைமுறைப்படுத்தி வருகிறது.

மாணவர்களின் அடிப்படை திறன்களில் முன்னேற்றம் காணப்பட்ட போதிலும், தேசிய அளவில் நடைபெறும் NAS(என்.ஏ.எஸ்) ACER (ஏசி.ஈ.ஆர்,) போன்ற திறன் அளவீட்டு ஆய்வுகளில் அரசுப் பள்ளி மாணவர்கள் வகுப்புக்கேற்ற மொழித் திறன்களை அடைவதில் குறைபாடு கொண்டிருப்பதாக சுட்டிக் காட்டப்படுகிறது.

ஆகவே மாணவர்களின் ஆங்கில அடிப்படை மொழித்திறன்களை மேம்படுத்தும் வகையில் ஒரு கூடுதல் முயற்சியானது அவசியமாகிறது. இதன் மூலம் மாணவர்கள் அடிப்படை ஆங்கில மொழித் திறன்களை எளிதாக பெரும்வகையில் மாற்றி அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களில் பணியாற்றும் மொழிப்பாட ஆசிரியர்கள், குறிப்பாக ஆங்கில மொழியை கற்பிக்கும் ஆசிரியர்களில் பலர் தங்களது வகுப்பறை சூழல், பணி செய்யும் பகுதியின் சமூக சூழலை கருத்தில் கொண்டு மாணவர்களின் அடிப்பனை மொழித் திறன்களை வள்ர்க்கும் வகையில் கற்பித்தல் நுட்பங்களை தாங்களே உருவாக்கி வகுப்பறைகளில் வெற்றிகரமாக செயல்படுத்தி வருகின்றனர்.

இவ்வாறான பல சுய முன்னெடுப்புகள் ஊடகங்களில் காட்சிப்படுத்தப்பட்டு அனைவரின் பாராட்டையும் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

அரசுப் பள்ளிகளில் பணியாற்றும் பல ஆசிரியர்கள்தன்னார்வத்தோடு கற்பித்தல் வழிமுறைகளை உருவாக்குபவர்களாகவும், பிற ஆசிரியர்கைள் உருவாக்கப்பட்ட கற்பித்தல் நுட்பங்களை தங்களது வகுப்பறை சூழலுக்கு ஏற்ப பயன்படுத்துபவராகவும் உள்ளபோதிலும் இவ்வாறான முயற்சிகள், அவ்வாசிரியர்கள் பணியாற்றக்கூடிய சில பள்ளிகளுக்கு மட்டுமே பயன்படுகிறது. இத்தகைய சிறப்பான செயல்பாடுகள், அனைத்து அரசுப் பள்ளி மாணவர்களுக்கும் கிடைக்கும்படி செய்திட வேண்டியது அவசியமாகிறது.

பல மாவட்டங்களில் வெற்றிகரமாக செயல்பட்டு வரும் ஆசிரியர்களின் தனிப்பட்ட முயற்சிகளை, அதாவது, அவர்களது அணுகுமுறைகள், வழிமுறைகள் மற்றும் கற்பித்தல் நுட்பங்களை (Approach, Methodology and Techniques) ஒருங்கிணைத்து தொகுத்து, அவற்றை மொழி வள வங்கியாக மேம்படுத்தும் நோக்கில் முன்னெடுப்புகள் மேற்கொள்ளப்பட்டு, இம்மொழி வள வங்கி மூலம் ஆசிரியர்கள் தங்களின் கற்பித்தல் வழிமுறைகளை பிறருக்கு வழங்கவும் அவற்றைப் பெற விழைவோர் அவற்றினைப் பெற்றிடவும் முடியும்.

இதன் ஒரு பகுதியாக, மாணவர்களின் மொழித் திறன்களை மேம்படுத்தும் ஒரு புதிய முன்னெடுப்பாக "Level Up" என்ற தன்னார்வ திட்டம் அறிமுகப்படுத்தப்படுகிறது.

இத்திட்டத்தின் முதன்மை நோக்கமானது, அரசுப் பள்ளிகளில் குறிப்பாக ஆறு முதல் எட்டாம் வகுப்பு வரையிலான மாணவர்களின் ஆங்கில மொழி வாசித்தல், பேசுதல் மற்றும் எழுதுதல் ஆகிய அடிப்பனைத் திறன்களை மாணவர்கள் எளிதாக கற்றுக் கொள்ளும் வனகயில் ஏற்கனவே ஆசிரியர்களால் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிற செயல்பாடுகளை கொண்ட "மொழி வள வங்கி" ஒன்னற உருவாக்குவதாகும்.

ஒவ்வொரு மாவட்டத்திலும் இவ்வகையானமுயற்சிகனை வெற்றிகரமாக மேற்கொண்டு வரும் ஆசிரியர்கனை கொண்ட ஒரு புலனாய்க் குழு (WhatsApp group) (வாட்ஸ் அப் குரூப்) தோற்றுவிக்கப்பட்டுள்ளது. 2025 2026 ஆம் கல்வியாண்டில், ஜூன் மாதம் முதல் டிசம்பர் மாதம் வரை உள்ள ஏழு மாத காலத்திற்கு, ஒவ்வொரு மாதத்திற்கும் மாணவர்கள் அடைய வேண்டிய குறைந்தபட்ச மொழித் திறன் இலக்குகள் நிர்ணயிக்கப்பட உள்ளன.

மாவட்டம் தோறும் (மாவட்டத்திற்கு நான்கு அல்லது ஐந்து ஆசிரியர்கள்வீதம்) தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்கள் "Level Up" (லெவல் அப் ) புலனாய்க் குழுவில் இனணக்கப்பட்டுள்ளனர். இவ்வாசிரியர்களுக்கானமுதல்வழிகாட்டி இணைய வழி கூட்டம் 02.05.2025 அன்று காலை 10 மணி முதல் 12 மணி வரை பள்ளிக் கல்வி இயக்குநர் தலைமையில் நடத்தப்பட்டது.

இக்கூட்டத்தில் மாணவர்களின் ஆங்கில அடிப்பனைத் திறன்கள் மேம்படுத்துவது குறித்தும், சிறப்பாக தங்களது திறன்வளர் நுட்பங்களை கையாளும் ஆசிரியர்களின் அனுபவங்கள் குறித்தும் கலந்துரையாடப்பட்டது. தொடர்ந்து, மாணவர்களின் ஆங்கில அடிப்பனைத் திறன்கள் அடைவு குறித்த மாதவாரியான இலக்குகள் நிர்ணயிக்கப்பட்டு விரைவில் வெளியிடப்படும் எனதெரிவிக்கப்படுகிறது.

இதன் பொருட்டு, அனைத்து மாவட்ட முதன்மை கல்வி அலுவலர்கள் மற்றும் திட்ட அலுவலர்கள், தங்கள் மாவட்டங்களில் ஆங்கில மொழி கற்பித்தலில் புதுமையான முயற்சிகள் மேற்கொண்டு சிறப்பானகற்றல் விளைவுகளை ஏற்படுத்தியுள்ள ஆசிரியர்களை அடையாளம் கண்டு அவர்களது முயற்சிகளை பள்ளிக் கல்வி இயக்ககத்தின் கவனத்திற்கு கொணர்ந்து, இந்த "Level Up" (லெவல் அப் ) என்ற தன்னார்வ செயல்பாட்டு திட்டத்தில் அவ்வாசிரியர்களை இணைக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.

மேலும், புலனக்குழுவில் ஆசிரியர்கள் தங்களது கற்பித்தல் வழிமுறைகள் தொடர்பான பதிவுகளை பகிரும் வகையில் அப்புலனாய்க் குழுவானது அமைக்கப்படும்.. ஒவ்வொரு மாதமும் பள்ளிக்கல்வி இயக்ககத்தின் நேரடி கண்காணிப்பில், பள்ளிகளில் "Level Up" (லெவல் அப் ) என்ற தன்னார்வ திட்ட செயலாக்கத்தினால் மாணவர்கள் பெற்ற அடிப்படை ஆங்கில மொழித்திறன் அடைவு குறித்த ஆய்வு மேற்கொள்ளப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தினகனி

Namadhu dhina kani daily morning newspaper
Press register general of India
PRGI NO TNTAM/2023/88253

18.5.2025

## டாஸ்மாக் மேலாண் இயக்குநர் விசாகன் வீட்டில் 2வது நாளாக அமலாக்கத்துறை அதிகாரிகள் சோதனை



டாஸ்மாக் மேலாண் இயக்குநர் விசாகன் வீட்டில் 2வது நாளாக அமலாக்கத்துறை அதிகாரிகள் சோதனை நடத்தி வருகின்றனர். மணப்பாக்கத்தில் உள்ள விசாகன் வீட்டில் துணை ராணுவத்தினர் பாதுகாப்புடன் ED அதிகாரிகள் சோதனை. விசாகன், அவரது குடும்பத்தினர் வங்கிக் கணக்கு பரிவர்த்தனை தொடர்பான விவரங்களை ஆய்வு செய்கின்றனர். விசாகன் பயன்படுத்தும் மடிக்கணினியையும் அமலாக்கத்துறை அதிகாரிகள் ஆய்வுசெய்து வருகின்றனர்.


## டாக்டருக்கு பதில் செவிலியர் ஊசி போட்டார்; கர்ப்பிணியின் வயிற்றிலேயே இரட்டை குழந்தைகள் இறப்பு: தனியார் மருத்துவமனை மீது வழக்குப்பதிவு

தர்மபுரி

தர்மபுரி மாவட்டம் ஒட்டப்பட்டியை சேர்ந்தவர் அருண்குமார் (31). இவர் பிளாஸ்டிக் குடம் தயாரிக்கும் தொழில் செய்து வருகிறார். இவரது மனைவி நந்தினி (25). இவர்களுக்கு கடந்த 2 வருடத்திற்கு முன் திருமணம் நடந்தது. இந்நிலையில் நந்தினி கர்ப்பமடைந்தார். பிரசவத்திற்காக கடந்த மார்ச் 20ம் தேதி, தர்மபுரி பூங்கா அருகே தனியார் மருத்துவமனையில் சேர்த்தனர். அப்போது நந்தினிக்கு, மருத்துவருக்கு பதிலாக செவிலியர் ஊசி போட்டுள்ளார். அப்போதில் இருந்து நந்தினிக்கு உடல் நலக்குறைவு ஏற்பட்டது. இதையடுத்து அவரை மீட்டு, தர்மபுரி அரசு மருத்துவமனையில் பிரசவத்திற்கு சேர்த்தனர்.

பரிசோதனையில் வயிற்றிலேயே இரட்டை குழந்தைகள் இறந்திருந்தது. நந்தினி நலமாக உள்ளார். இதுகுறித்து தர்மபுரி டவுன் போலீஸ் ஸ்டேஷனில் அருண்குமார் புகார் அளித்தார். அதில் தனியார் மருத்துவமனையில் தவறான சிகிச்சை மற்றும் மருத்துவர்கள், செவிலியர்களின் அஜாக்கிரதையால் வயிற்றிலேயே குழந்தைகள் இறந்துவிட்டது என தெரிவித்தார். அதன்பேரில் போலீசார் தனியார் மருத்துவமனை மற்றும் மருத்துவர், செவிலியர்கள் மீது வழக்குப்பதிந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

## பூந்தமல்லி அருகே சாலை தடுப்பில் மோதி தீப்பிடித்து எரிந்த கார்



சென்னை, மே.18

பூந்தமல்லி அருகே நெடுஞ்சாலையில் வந்த கார் டிரைவரின் கட்டுப்பாட்டை இழந்து சாலை தடுப்பு சுவற்றில் வேகமாக மோதியது. மோதிய வேகத்தில் சட்டென்று கார் தீப்பிடித்து எரியத்தொடங்கியது. இதனால் போக்கு வரத்தில் பாதுப்பு ஏற்பட்டது.

இது தொடர்பாக தகவல் அறிந்து வந்த போலீசார் மற்றும் தீயணைப்பு வீரர்கள் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று தீயை கட்டுப்படுத்தினர்.

இது குறித்து வழக்குப்பதிவு செய்த போலீசார் அந்த கார் எப்படி எரிந்தது என்பது தொடர்பாக விசாரணை நடத்தி வருகின்றனர்.. இந்த சம்பவத்தால் அந்த சாலையில் சிறிது பரபரப்பை ஏற்படுத்தியது.


## சேவை தொடங்கி 100 நாட்கள் நிறைவு; நாகைஇலங்கை கப்பலில் கூடுதல் லக்கேஜிக்கு அனுமதி: சுற்றுலா பயணிகள் மகிழ்ச்சி



நாகப்பட்டினம்

நாகையில் இருந்து இலங்கைக்கு பயணிகள் கப்பல் சேவையில், கூடுதல் லக்கேஜ் எடுத்த செல்ல ஒன்றிய, மாநில அரசுகள் அனுமதி அளித்துள்ளது. இது சுற்றுலா பயணிகளுக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. நாகப்பட்டினத்தில் இருந்து இலங்கை காங்கேசன் துறைக்கு சுபம் நிறுவனம் சிவகங்கை என்ற பெயரில் கப்பல் போக்குவரத்தை தொடங்கியது. நேற்று (16ம் தேதி) 100வது நாள் ஆவதை முன்னிட்டு நாகப்பட்டினம் துறைமுகத்தில் இருந்து இலங்கை காங்கேசன் துறைக்கு புறப்பட்ட கப்பலில் 85 பயணிகள் பயணம் செய்தனர். இரு நாட்டு பயணிகளுக்கும் இனிப்பு வழங்கினர்.இலங்கைக்குகப்பல்புறப்படுவதற்கு முன்பு துறைமுக அதிகாரிகள், சுங்கத்துறை அதிகாரிகள் மற்றும் கப்பலை இயக்கும் சுபம் நிறுவன குழுமத்தினருக்கு சால்வை அணிவிக்கப்பட்டது. இதை தொடர்ந்து கொடியசைத்து வைத்து சிவகங்கை கப்பலை வழி அனுப்பி வைத்தனர். விமான கட்டணத்தை விட கப்பல் கட்டணம் குறைவாக இருப்பதால் கப்பலில் பயணம் செய்யும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. ஏற்கனவே பயணிகள் 10 கிலோ வரை லக்லேஜ் எடுத்து செல்ல அனுமதிக்கப்பட்டது.தற்போது22கிலோ வரை கூடுதலாக லக்கேஜ் எடுத்து செல்ல சுற்றுலா பயணிகளுக்கு ஒன்றிய மற்றும் மாநில அரசுகள் அனுமதி அளித்துள்ளது. இதனால் சுற்றுலா பயணிகள் மத்தியில் நல்ல வரவேற்பு கிடைத்துள்ளது என சுபம் கப்பல் நிறுவனத்தினர் கூறினர். பயணிகளுக்கு பாதுகாப்பு நிறைவாக உள்ள வகையில் கப்பல் வடிவமைக்கப்பட்டுள்ளது. பயணிகளுக்கு புதுவித அனுபவத்தை இந்த பயணம் அள்ளித்தரும் என கேப்டன் ராஜாஜெகபர் கூறினார்.

## பொள்ளாச்சி பாலியல் வழக்கு; பாதிக்கப்பட்ட 2 பெண்கள் நிவாரணம் பெற விண்ணப்பம்: பறிமுதல் செய்யப்பட்ட நகைகள் ஒப்படைப்பு



கோவை, மே.18

கோவை மாவட்டம் பொள்ளாச்சியில் 2019ல் இளம்பெண்களை வீடியோ எடுத்து, பாலியல் வன்கொடுமை செய்த வழக்கில் சபரிராஜன் (28), திருநாவுக்கரசு (30), அருளானந்தம் (36) உள்ளிட்ட 9 பேருக்கு சாகும்வரை ஆயுள் தண்டனை விதித்தும், பாதிக்கப்பட்ட பெண்களுக்கு ரூ.85 லட்சம் நிவாரணம் வழங்கவும் நீதிபதி ஆர்.நந்தினி தேவி கடந்த 13ம் தேதி உத்தரவிட்டார். இந்நிலையில் பாதிக்கப்பட்ட 8 பெண்களில் 2 பெண்கள் நிவாரணம் பெறுவதற்காக கோவை மாவட்ட சட்ட உதவி மையத்தில் விண்ணப்பம் வழங்கி உள்ளனர். இவ்வழக்கில் பறிமுதல் செய்யப்பட்ட நகைகள் பாதிக்கப்பட்ட பெண்ணிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து சிபிஐ வழக்கறிஞர் சுரேந்திர மோகன் கூறியதாவது: பொள்ளாச்சி பாலியல் வழக்கில் மொத்தம் 8 பெண்கள் பாதிக்கப்பட்ட நிலையில் 7 பேருக்கு ரூ.85 லட்சம் நிவாரணம் வழங்க நீதிமன்றம் உத்தரவிட்டு இருந்தது. பாதிக்கப்பட்ட 2 பெண்களில் ஒரு பெண்ணுக்கு 10 லட்சமும், மற்றொரு பெண்ணுக்கு 2 லட்சமும் நிவாரணம் அறிவிக்கப்பட்டிருந்தது. இந்த 2 பெண்களில் ஒரு பெண்ணுக்கு உயர்நீதிமன்றமும் ரூ.25 லட்சம் இழப்பீடு வழங்க உத்தரவிட்டுள்ளது. மீதமுள்ள பெண்கள் அடுத்த வாரம் விண்ணப்பம் கொடுப்பதாக தெரிவித்துள்ளனர். பாதிக்கப்பட்ட பெண்ணிடமிருந்து நகைகளை குற்றவாளிகள் பறித்திருந்தனர். இந்த நகைகள் வழக்கிற்காக ஒப்படைக்கப்பட்டிருந்தது. தற்போது வழக்கு முடிவுக்கு வந்துள்ள நிலையில் சம்மந்தப்பட்ட பெண்ணிடம் நகைகள் ஒப்படைக்கப்பட்டு ள்ளது. தற்போது 2 பெண்களிடம் தீர்ப்பின் இலவச நகல் வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

## தினசரி பலன்கள் (18.5.2025)

மேஷம்
இன்று உங்கள் முயற்சிகள் வெற்றியை நோக்கி நகரும். சிறிய சிக்கல்கள் இருந்தாலும், தைரியமாக எதிர்கொள்ளுங்கள்.

ரிஷபம்
பணியிலும், குடும்பத்திலும் நன்மை காணப்படும். ஆரோக்கியத்தில் சிறிய கவனக்குறைவு ஏற்படலாம்.

மிதுனம்
வேலைப்பளு அதிகரிக்கும்; ஆனால் உங்கள் முயற்சிகள் வெற்றியை தரும். உறவுகளில் நம்பிக்கையை வளர்த்துக் கொள்ளுங்கள்.

கடகம்
தொழிலில் முன்னேற்றம் காணப்படும். குடும்பத்தில் சிறிய முரண்பாடுகள் ஏற்படலாம்; அமைதியாக அணுகுங்கள்.

சிம்மம்
புதிய வாய்ப்புகள் கிடைக்கும். தொழிலில் உயர்வு காணலாம். உறவுகளில் நம்பிக்கையை வளர்த்துக் கொள்ளுங்கள்.

கன்னி
பணியிலும், குடும்பத்திலும் நன்மை காணப்படும். ஆரோக்கியத்தில் சிறிய கவனக்குறைவு ஏற்படலாம்.

துலாம்
வேலைப்பளு அதிகரிக்கும்; ஆனால் உங்கள் முயற்சிகள் வெற்றியை தரும். உறவுகளில் நம்பிக்கையை வளர்த்துக் கொள்ளுங்கள்.

விருச்சிகம்
தொழிலில் முன்னேற்றம் காணப்படும். குடும்பத்தில் சிறிய முரண்பாடுகள் ஏற்படலாம்; அமைதியாக அணுகுங்கள்.

தனுசு
புதிய வாய்ப்புகள் கிடைக்கும். தொழிலில் உயர்வு காணலாம். உறவுகளில் நம்பிக்கையை வளர்த்துக் கொள்ளுங்கள்.

மகரம்
பணியிலும், குடும்பத்திலும் நன்மை காணப்படும். ஆரோக்கியத்தில் சிறிய கவனக்குறைவு ஏற்படலாம்.

கும்பம்
வேலைப்பளு அதிகரிக்கும்; ஆனால் உங்கள் முயற்சிகள் வெற்றியை தரும். உறவுகளில் நம்பிக்கையை வளர்த்துக் கொள்ளுங்கள்.

மீனம்
தொழிலில் முன்னேற்றம் காணப்படும். குடும்பத்தில் சிறிய முரண்பாடுகள் ஏற்படலாம்; அமைதியாக அணுகுங்கள்.

## திண்டுக்கல் ஏ.ஆர்.டெய்ரி நிறுவன உரிமத்தை சஸ்பெண்ட் செய்த உத்தரவு ரத்து

சென்னை, மே.18


திருப்பதி தேவஸ்தான் கலப்பட நெய் சர்ச்சையில் சிக்கிய திண்டுக்கல் ஏ . ஆ ர் . டெ ய் ரி நிறுவனத்தின் உரிமம் சஸ்பெண்ட் செய்த உத்தரவு ரத்து செய்யப்பட்டது.

உணவு பாதுகாப்பு தர நிர்ணய ஆணைய உத்தரவை ஏ.ஆர்.டெய்ரி நிறுவனம் சார்பில் ஐகோர்ட் மதுரை கிளையில் வழக்கு தொடரப்பட்டது.

நெய் மட்டுமின்றி பால் பொருள் உற்பத்திக்கான உரிமத்தை சஸ்பெண்ட் செய்ததால் நிறுவனம் பெரிதும் பாதிக்கப்பட்டதாக மனுதாரர் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

ஐகோர்ட் கிளையில் தீர்ப்பு தள்ளிவைக்கப்பட்ட நிலையில் சென்னை ஐகோர்ட்டில் நீதிபதி லட்சுமி நாராயணன் தீர்ப்பு வழங்கி உத்தரவிட்டார்.

## ஒரே நேரத்தில் பல மொழி படங்களில் நடித்து வரும் ஸ்ரீலீலா



தெலுங்கு சினிமாவில் முன்னணி நடிகையாக வலம் வருபவர் ஸ்ரீலீலா. 23 வயதாகும் ஸ்ரீலீலா 'புஷ்பா2' படத்தில் போட்ட குத்தாட்டம் இந்திய அளவில் கவனம் ஈர்த்தது. அதையடுத்து இவருக்கு பல மொழிகளில் நடிக்க வாய்ப்பு கிடைத்தது.

அதன்படி, தற்போது இவர் கார்த்திக் ஆர்யனுக்கு ஜோடியாக பாலிவுட்டில் அறிமுகமாக இருக்கிறார். இப்படம் வருகிற தீபாவளிக்கு வெளியாக உள்ளது. அதேபோல், தமிழில் சிவகார்த்திகேயனின் 'பராசக்தி' படத்தின் மூலம் அறிமுகமாகிறார்.

தெலுங்கில் ரவி தேஜாவுடன் 'மாஸ் ஜாதரா' மற்றும் அகினேனி அகிலுடன் 'லெனின்' ஆகிய படங்களிலும் நடித்து வருகிறார். இவ்வாறு ஒரே நேரத்தில் பல மொழி படங்களில் நடித்து வருவதால் பான் இந்தியா அளவில், 'சென்சேஷனல்' நடிகையாக ஸ்ரீலீலா மாறி இருக்கிறார்.

## 'என்டிஆர்நீல்' படக்குழுவின் அறிவிப்பு ஏமாற்றத்தில் ரசிகர்கள்



தெலுங்கு சினிமாவில் முன்னணி நடிகராக வலம் வருபவர் ஜூனியர் என்.டி.ஆர். இவர் பாலிவுட்டில் 'வார் 2' படத்தில் நடித்து முடித்துள்ளார். இப்படம் ஆகஸ்ட் மாதம் 14ம் தேதி வெளியாக உள்ளது. இது மட்டுமில்லாமல் பிரசாந்த் நீலுடன் 'என்.டி.ஆர்நீல்' படத்திலும் அவர் நடித்து வருகிறார்.

வருகிற 20ம் தேதி ஜூனியர் என்.டி.ஆரின் பிறந்தநாளை கொண்டாடும் வகையில், 'என்.டி.ஆர்நீல்' படத்தின் கிளிம்ப்ஸ் மற்றும் 'வார் 2' படத்தின் முக்கிய அப்டேட் வெளியாகும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது.இதனால்,ரசிகர்கள்மிகுந்தமகிழ்ச்சியில் இருந்தனர். இந்நிலையில், ரசிகர்களுக்கு ஏமாற்றமளிக்கும் செய்தி ஒன்று வெளியாகி உள்ளது.

அதன்படி, ஜூனியர் என்.டி.ஆரின் பிறந்தநாளைக் கொண்டாடும் விதமாக 'வார் 2' படக்குழு முக்கிய அப்டேட் வெளியிட உள்ளதால், என்.டி.ஆர்நீல் படக்குழுவினர், வார் 2 படத்திற்கு வழிவிட முடிவு செய்துள்ளனர். அதன்படி, வருகிற 20 ஆம் தேதி திட்டமிடப்பட்ட என்.டி.ஆர்நீல் படத்தின் கிளிம்ப்ஸ் வேறொரு தேதிக்கு மாற்றப்பட்டுள்ளது.

## டாம் குரூஸுடன் 'பெருசு' பட நடிகை வைரல்



சமூக வலைதள பரபலம் நிஹாரிகா. இவர் கடந்த மாதம் வெளியாகி வரவேற்பை பெற்ற 'பெருசு' படத்தில் கதாநாயகியாக நடித்திருந்தார். தொடர்ந்து, கார்த்திக் சுப்புராஜ் தயாரிக்கும் 3 படங்களுக்கு கதாநாயகியாக ஒப்பந்தமாகி இருக்கிறார்.

இந்நிலையில், ஹாலிவுட் நடிகர் டாம் குரூஸின் 'மிஷன்: இம்பாசிபிள் தி பைனல் ரெக்கனிங்' பட பிரீமியர் ஷோவில் நிஹாரிகா சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டார்.

அப்போது, டாம் குரூஸுடன் புகைப்படம் எடுத்துக்கொண்டார். அதை சமூக வலைதளத்தில் பகிர்ந்து மகிழ்ந்துள்ள நிஹாரிகா,

கனவில் கூட இப்படி நடக்கும் என்று நினைக்க தைரியம் இல்லாத தனக்கு, அதை சாத்தியப்படுத்தியதற்கு நன்றி என்று நெகிழ்ந்திருக்கிறார். இந்த புகைப்படங்கள் தற்போது இணையத்தில் வைரலாகி வருகிறது.

## "சிலர் பணத்தை விரும்புகிறார்கள், சிலர் புகழைத் தேடுகிறார்கள், ஆனால் ... நடிகை திவி


"புஷ்பா 2" மற்றும் "டாக்கு மகாராஜ்" போன்ற படங்களில் துணை கதாபாத்திரங்களில் நடித்துள்ள நடிகை திவி வாத்யா , மக்கள் எப்போதும் முழுமையாக திருப்தி அடையமாட்டார்கள் என்று கூறியுள்ளார்.

அவர் கூறுகையில், "மக்கள் எப்போதும் முழுமையாக திருப்தி அடைவதில்லை. நமக்கு ஒரே ஒரு வாழ்க்கைதான் இருக்கிறது, பிரச்சினைகளில் கவனம் செலுத்தாமல், அவற்றை ஒரு சிட்டிகை உப்புபோல எடுத்துக்கொண்டு முன்னேறவேண்டும். சிலர் பணத்தை விரும்புகிறார்கள், சிலர் புகழைத் தேடுகிறார்கள், சிலர் நட்சத்திர அந்தஸ்தை துரத்துகிறார்கள், ஆனால் என்னைப் போன்றவர்களுக்கு, அன்புதான் தேவை.

ஒவ்வொருவரும் தாங்கள் விரும்புவதைத் தொடர்ந்து செய்ய வேண்டும். அதே சமயத்தில் அந்த பயணத்தில் மகிழ்ச்சியை காண மறக்காமலும் இருக்க வேண்டும் ' என்றார்.

நடிகை திவி, தனது இன்ஸ்டாகிராமில் புகைப்படங்களை வெளியிட்டு தனது எண்ணங்களை அடிக்கடி பகிர்ந்து வருகிறார். அந்த வகையில் தற்போது வெளியிட்டுள்ள புகைப்படங்களுடன் பகிர்ந்த இந்த பதிவு இணையத்தில் வைரலாகி வருகிறது.


## ஜூனியர் தெற்காசிய கால்பந்து: இந்திய அணி இறுதிப்போட்டிக்கு தகுதி



7வது ஜூனியர் (19 வயதுக்கு உட்பட்டோர்) தெற்காசிய கால்பந்து சாம்பியன்ஷிப் போட்டி அருணாசலபிரதேசத்தில் உள்ள யூபியாவில் நடந்து வருகிறது. இதில் நேற்று நடைபெற்ற அரையிறுதி ஆட்டம் ஒன்றில் இந்திய அணி, மாலத்தீவை எதிர்கொண்டது. இதில் தொடக்கம் முதலே ஆதிக்கம் செலுத்திய இந்திய அணி 30 என்ற கோல் கணக்கில் மாலத்தீவை தோற்கடித்து இறுதிப்போட்டிக்கு முன்னேறியது.

முன்னதாக நடந்த மற்றொரு அரையிறுதி ஆட்டத்தில் வங்காளதேச அணி 21 என்ற கோல் கணக்கில் நேபாளத்தை வீழ்த்தியது. நாளை நடக்கும் இறுதி ஆட்டத்தில் இந்தியா வங்காளதேசம் அணிகள் மோதுகின்றன.

## தோஹா டயமண்ட் லீக் ஈட்டி எறிதல்: புதிய சாதனை படைத்த நீரஜ் சோப்ரா




டயமண்ட் லீக் தொடரின் 16வது சீசன் நடந்து வருகிறது. இதன் 3வது சுற்று கத்தாரின் தோஹாவில் நடைபெற்று வருகிறது. இந்த தொடரில் இன்று நடைபெற்ற ஆண்களுக்கான ஈட்டி எறிதல் போட்டியில் இந்திய வீரர் நீரஜ் சோப்ரா 90.23 மீட்டர் தூரம் ஈட்டி எறிந்து புதிய சாதனை படைத்துள்ளார்.

இதன் மூலம் 90 மீட்டர் தூரம் எறிந்த 3வது ஆசியவீரர் என்ற பெருமையை நீரஜ் சோப்ரா பெற்றார். இதற்கு முன்பு இந்த இலக்கை எட்டிய மற்ற இரண்டு ஆசிய வீரர்கள் ஒலிம்பிக் சாம்பியனான பாகிஸ்தானின் அர்ஷத் நதீம் (92.97 மீ) மற்றும் சீன தைபேயின் சாவோசுன் செங் (91.36 மீ) என்பது குறிப்பிடத்தக்கது.

போட்டியின் முடிவில் நீரஜ் சோப்ரா 2வது இடம் பிடித்தார். ஜெர்மனியின் ஜூலியன் வெபர் 91.06 மீட்டர் தூரம் எறிந்து முதலிடம் பிடித்தார். கிரனடாவின் ஆண்டர்சன் பீட்டர்ஸ் 85.64 மீட்டர் தூரம் எறிந்து 3வது இடம் பிடித்தார். மற்றொரு இந்திய வீரர் ஜெனோ கிஷோர் 78.60 மீட்டர் தூரம் எறிந்து 8வது இடம் பிடித்தார்.

## இத்தாலி ஓபன் டென்னிஸ்: அல்காரஸ் இறுதிப்போட்டிக்கு முன்னேற்றம்

பல முன்னணி வீரர், வீராங்கனைகள் பங்கேற்றுள்ள இத்தாலி ஓபன் டென்னிஸ் தொடர் ரோமில் நடைபெற்று வருகிறது. இறுதிக்கட்டத்தை எட்டியுள்ள இந்த தொடரில் இன்று நடைபெற்ற ஆண்கள் ஒற்றையர் பிரிவின் அரையிறுதி ஆட்டம் ஒன்றில் ஸ்பெயின் வீரர் கார்லஸ் அல்காரஸ் , இத்தாலி வீரர் லோரென்சோ முசெட்டி மோதினர்.

பரபரப்பான இந்த ஆட்டத்தில் சிறப்பாக விளையாடிய அல்காரஸ் 63,7(7)6(4) என்ற செட் கணக்கில் வெற்றி பெற்றார். இதனால் அவர் இறுதிப்போட்டிக்கு முன்னேறினார்.

## உத்வேகமாக இருந்திருக்கிறீர்கள்...ரோகித் சர்மாவை பாராட்டிய சூர்யகுமார் யாதவ்




இந்திய ஒருநாள் கிரிக்கெட் அணியின் கேப்டன் ரோகித் சர்மா பெயரில் மும்பை வான்கடே மைதானத்தில் ஸ்டாண்டு திறக்கப்பட்டுள்ளது. அந்த ஸ்டாண்டை ரோகித் சர்மாவின் அப்பா அம்மா, மராட்டிய முதல்மந்திரி தேவேந்திர பட்னாவிஸ் ஆகியோர் சேர்ந்து திறந்து வைத்தனர்.ரோகித் சர்மா தற்போது ஐபிஎல் மும்பை அணிக்காக விளையாடி வருகிறார்.

இந்த நிலையில் ரோகித் சர்மா பெயரில் ஸ்டான்ட் திறக்கப்பட்டது தொடர்பாக இந்திய டி20அணியின் கேப்டனும் , மும்பை அணி வீரருமான சூர்யகுமார் யாதவ் வெளியிட்டுள்ள பதிவில்,

வாழ்த்துக்கள் ரோகித் சர்மா. பினிஷர் முதல் தொடக்க வீரர்வரை, எங்கள் கேப்டனாக ஒவ்வொரு பாத்திரத்திலும் நீங்கள் ஒரு உத்வேகமாகவும் பெருமையாகவும் இருந்திருக்கிறீர்கள். நான் முன்பு கூறியது போல், நல்லவர்களுக்கு நல்லது நடக்கும், நீங்கள் அதற்கு தகுதியானவர். வான்கடே இப்போது இன்னும் சிறப்பாக உள்ளது . என தெரிவித்துள்ளார் .

NAMADHU DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.